தொழில்சா[illegible]ல்வி

# இலங்கையின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பல்



120115

ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | |
|---|---|
| எழுத்தாளர் | கலாநிதி. எஸ். டி. லயனல். அமரகுணசேகர |
| பாடப்பதிப்பாசிரியர்கள் | எச். பி. சி. ஏ. ரி. ஜெயசேகரா<br>கே. பீ. த. மெல்<br>பி. ஏ. டேவிட்<br>வை. எல். ஏ. வஹாப்<br>கே. ரி. கனகரத்தினம்<br>சுவர்ணு நவரட்ணம் |
| தளக்கோலம் | ஹேமஜித் மகிந்தரத்ன<br>எஸ் எம். ஆர். சுூதீன்<br>எ. சிவராசா |
| மேற்பார்வை | கே. ஏ. பியதிஸ்ஸ<br>ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி. எஸ். டி. லயனல். அமரகுணசேகர |

# இலங்கையின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பல்

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| தொழிற்சார் கல்வி | 1201 |
| இலங்கையில் பாடசாலை | |
| அமைப்பு முறையில் பரம்பல் | 120115 |

பொருளடக்கம் பக்கம்

0.0 அறிமுகம் ........ 3
1.0 குறிக்கோள்கள் 3
2.0 முற்சோதனை ........ 4

பகுதி I

3.0 புராதன இலங்கையில் பாடசாலை அமைப்பு முறைகள் ........ 5
4.0 வெளிநாட்டு ஆதிக்கம் ........ 11
4.1 போர்த்துக்கீசர்கால பாடசாலைகள் ........ 11
4.2 ஒல்லாந்தர்கால பாடசாலைகள் ........ 13
4.3 பிரித்தானியர்கால பாடசாலைகள் ........ 15

பகுதி II

5.0 1943 ஆம் ஆண்டு கல்வி விசேட குழுவின் அறிக்கை ........ 24
5.1 சுதந்திரம் பெற்றபின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பல் ........ 27

பகுதி III

6.0 1972 ஆம் ஆண்டு கல்வி புனரமைப்பு ஆலோசனைகள் ........ 30
7.0 1978 ஆம் ஆண்டு கல்வி புனரமைப்பு ஆலோசனையின் பின் பாடசாலைகளின் அமைப்பு முறை... 33

பகுதி IV

8.0 1981 ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை... 38
9.0 பொழிப்பு ........ 44
10.0 பிற்சோதனை ........ 45
11.0 ஒப்படை ........ 47
12.0 விடைகள் ........ 48
13.0 உசாத்துணை நூல்கள் ........ 48

© 1991 தேசிய கல்வி நிறுவகம்.

முதற் பதிப்பு 1 : 2

## 0.0 அறிமுகம்

இலங்கையில் பாடசாலைகளின் பாடவிதானம் என்னும் மொடியூலைக் கற்றதின் பின் நீங்கள் பாடவிதானம் என்ருல் என்ன? பாடவிதான வகைகள் யாவை? என் பனபற்றி சிறந்த ஒரு விளக்கம் பெற்றுக் கொண் டிருப்பீர்கள். அதன் பின் உங்கள் கவனம் பாடவிதா னம் நடைமுறைப் படுத்துவது எவ்வாறு? எங்கே? என்பதில் ஈர்க்கப்படுகிறது. பாடவிதானத்தை நடை முறைப்படுத்தப்படும் முறைசார் நிறுவனம் பாடசாலை யாகும். பல நூற்றுண்டுகளாக வளர்ச்சியடைவதின் மூலம் உருவாக்கப்பட்ட பாடசாலை முறையே இன்று காணப்படுகின்றது. தற்கால பாடசாலை முறை பற்றி நல்லதொரு விளக்கம் பெற்றுக் கொள்வதற்காக நாட்டின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பலைப் பற்றி வரலாற்று அடிப்படையில் ஆராய்வது மிகவும் பயனுள்ளதாகும். இந்த மொடியூலில் இலங்கையில் பாடசாலைகளின் அமைப்பு முறையில் பரம்பலைப்பற்றி நீங்கள் அவதானம் செலுத்துமாறு வேண்டப்படு கின்றது.

## 1.0 குறிக்கோள்கள்

இம் மொடியூலைக் கற்பதனுல் கீழ்வரும் குறிக்கோள் கள் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

★ இலங்கையில் பாடசாலைகளின் அமைப்பு முறை யின் பரம்பலை பற்றி அறிந்து கொள்ளல்.

★ தற்கால பாடசாலை அமைப்பு ஒழுங்குகளை அறிந்து கொள்ளல்.

★ பாடசாலைகளின் எதிர்கால முன்னேற் றத்தை விளங்கிக் கொள்ளல்.

★ சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப பாடசாலைகளின் அமைப்பு மாற்றமடைய வேண்டும் என்ற உணர்வுகளின் வளர்ச்சி.

★ வரலாற்று அடிப்படையில் ஏற்பட்ட மாற்றங் களை ஆராயும் திறனை வளர்த்துக் கொள்ளல்.

★ பாடசாலை அமைப்பு முறைகளை நடைமுறைப் படுத்தும்போது தேவையான பின்னூட்டல் களை வழங்கும் திறனை வளர்த்துக் கொள்ளல்.

இலங்கையில் பாடசாலைகளின் அமைப்பு முறைகளை கற்பதற்கு முன் உங்களிடம் காணப்படும் முன்னறி வினைப் பரிசோதிப்பதற்காக பின்தரப்படும் முற்சோதனைக்கு விடை அளியுங்கள்.

## 2.0 முற்சோதனை

கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் உள்ள சொற்களில் சரியானதைத் தெரிந்து கீழ் தரப்படும் வசனங்களைப் பூர்த்தி செய்க.

1. முறைசார் கல்வியின் பிரதான காரணியாக அமைவது.............. (அ) பாடசாலை (ஆ) குடும்பம் (இ) சமூகம் (ஈ) அரசு

2. முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் ஒன்றுக்கொன்று ஏற்புடையதாக இயைபாக்கம் பெற்று செயல்படும் முழுநடைமுறையும்.
..............................

   (அ) வெளியீடாகும் (ஆ) அமைப்பாகும்
   (இ) திட்டமாகும் (ஈ) வளர்ச்சியாகும்

3. நடைமுறையிலுள்ள நிறுவன அமைப்பு காலத்துக்கு பொருத்தமான முறையில் உருவாக்கப் படுதல்...................

   (அ) அமைத்தல் (ஆ) புனரமைத்தல்
   (இ) நவீனமயப்படுத்தல் (ஈ) திட்டமிடுதல்

4. காலத்துக்குக்காலம் ஏற்படும் சமூக பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப ஏதாவது ஒரு அமைப்பு வளர்ச்சியடைதலை..............என அழைக்கிறோம்.

   (அ) விரிவடைதல் (ஆ) பரம்பல்
   (இ) உருவாதல் (ஈ) பின்னூட்டல்

5. முன்திட்டமில்லாது செயல்படுத்தப்படும் ஒரு கல்வி ...........................கல்வி என அழைக்கப்படும்.

   (அ) அடிப்படை (ஆ) முறைசாரா
   (இ) முறைசார் (ஈ) உயர்

**உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.**

பாடசாலை அமைப்பு முறைப் பரம்பலைப்பற்றி கற்பதில் புராதன இலங்கையில் காணப்பட்ட பாடசாலை முறை பற்றிய கல்வி முக்கியமானதாகும். அதைப்பற்றி இப் போது கவனிப்போம்.

பகுதி I

## 3.0 புராதன இலங்கையில் பாடசாலை அமைப்பு முறைகள்

பண்டைய மன்னர் காலங்களில், நடைமுறையிலிருந்த கல்வி முறைக்கு ஆரம்ப அடிப்படையாக அமைந்தது பௌத்த கல்வி மரபுகளேயாகும். அக்காலத்தில் கல்வி முறையினுல் இருபிரதான நோக்கங்கள் எதிர்பார்க்கப் பட்டதாக தெரிகின்றது.

- அறிவு வழங்குதல்.
- நல்லொழுக்கங்களையும், ஆத்மீக பண்புகளை யும் விருத்தி செய்து கொள்ளல்.

இந் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மூன்று வகையான முறைசார் கல்வி நிறுவனங்கள் பண்டைய முறையில் காணக்கூடியதாக இருந்தது.

- குரு வீடு.
- பன்சல. (பௌத்த கோவில்)
- பிரிவெனு.

### குருவீடு



குருவீட்டில், வாசிப்பு எழுதல் எண்கள் ஆகியவற்றைப் பற்றி அடிப்படை விளக்கங்களை இளம் வயதினருக்கு வழங்கப்பட்டது. அங்கே மாணவர்கள் பெற்றுக்

கொண்ட கல்வியின் இயல்பினைப்பற்றி பண்டைய கவிகள் கூறுகின்றன. அதன் கருத்துக்கள் பின்வருமாறு.

எழுத்துக்களை கற்க ஆரம்பித்து அவற்றைப் பாடமாக்குகின்றனர். பலவகையான எழுத்துக்களை தொடர்ந்து கற்கின்றனர். அவர்கள் சரீர தண்டனைகளின்றி மணலில் எழுத்துக்களை எழுதிப் பழகுகின்றனர். தொடர்ந்து வாசிப்பில் தேர்ச்சிபெற உரத்து புத்தகத்தை வாசிக்கின்றனர்.

இவ்வாறான ஆரம்ப கல்வியைக் குரு வீட்டில் பிள்ளைகள் பெற்றனர். தொடர்ச்சியான கல்வியைப் பெற விரும்புபவர்கள் பன்சல (பௌத்த கோவில்) லுக்கு சென்று பெற்றுக்கொண்டனர்.

**பன்சல (பௌத்த கோவில்)**

குருவீட்டில் பெற்ற கல்வியினைவிட பன்சலவில் பெற்ற கல்வியானது விரிவு பெற்றதாகும். பௌத்த கல்விக்கே முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. இங்கு கல்வி பெற்றவர்கள் பெரும்பாலும் பௌத்தர்களாகும். அவர்கள் பௌத்த குருமார்களாக மாறவிருந்தவர்களாகவும் வைத்தியம் சோதிடம் ஆசிரியத் தொழில் ஆகியவற்றில் ஈடுபடவிரும்பிக் கற்பவர்களுமாகவும் காணப்பட்டனர். பன்சலவுக்குச் சென்றனர். அங்கு கற்பிக்கப்பட்ட பாடங்கள் பாளி, மொழி, சமஸ்கிருதம், இலக்கியம், வரலாறு, கணிதம், சோதிடம், வைத்தியம், கவிதை, இலக்கணம், அலங்கார சாஸ்திரம் என்பனவாகும். இதனை விட சில பன்சலவில் செதுக்கல் கலை, சித்திரம் என்பவற்றிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. இங்கு கல்வி ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. பெண்கள், குருவீடுகளில் ஆரம்ப கல்வியையே பெறமுடிந்தது. பன்சலவில் கல்வி பெற்றவர்கள் பௌத்த குருமார்களாக விரும்புவார்கள் மேலதிக கல்வியினை பிரிவேனுக்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரிவெனுக்கள்**

பிரிவெனுக்கள் வழங்கிய கல்வியைப் பற்றி நன்கு விளங்கிக் கொள்ள கீழ்தரப்பட்ட பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள செயல்ப்பாட்டினையும் செய்க.

கோட்டைக் காலத்தில் பிரிவேனுக்கள் மேற்கொண்ட கல்வியினை தூதுக்காவியப் பகுதி எடுத்துக் கூறுகிறது. கிருசந்தேசி (கிளிவிடுதூது) காவியத்தில் ஒருபகுதி விஜய பாகு பிரிவெனு தொட்டகம பற்றி கூறுவது கீழே தரப்பட்டுள்ளது.

அங்குள்ள குருமார்கள், பௌத்த சமயத்தின் ஆழமான தத்துவங்களின் கருத்துக்களை அறிய முற்பட்டனர். சிலர் புத்த பெருமானின் போதனைகளையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். புத்த பெருமானின் தத்துவத்தில் தொகையான உருவப்படங்கள் காணப்பட்டன. அவை அங்கு வரும் மக்களுக்காக சமய கோவிலின் உட்பகுதியில் வைக்கப்பட்டிருந்தன. அங்கு

சில பிராமணர்கள் வேதங்களை கற்கின்றனர் அவர்கள் தங்களது ஐயங்களை தங்கள் ஞானத்தினால் தீர்த்துக் கொண்டனர். அவர்கள் கோவிலின் எல்லா பகுதிகளிலும் ஒழுங்கான எண்ணங்களுடன் வீற்றிருப்பர். சிலர் சிதத் சங்கராவ என்ற சிங்கள இலக்கண நூலை மரத்தின் கீழ் இருந்து கால்களை பத்மாசன நிலையில் வைத்து கற்றனர். கோவில்களின் பல பகுதிகளிலும் தாம் விரும்பியபடி அமர்ந்து சமஸ்கிருதம், தமிழ், பாளி, சிங்களம், கவிதை, போன்றவற்றைக் கற்றனர்.

ஹங்ச சந்தேசிய என்ற கவிதையில் காரகல இடத்து பத்மாவதி பிரிவெனாவினைப் பற்றி விபரிக்கின்றது.

சிலர் சாந்தி, போன்ற இலக்கணப் பகுதிகளைப் பாடமாக்குகின்றனர். இவை அறிவு வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டது. பௌத்த குருமார்கள், பௌத்த சமய சட்ட திட்டங்களை எதுவித கருத்து மயக்கமில்லாது கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இலக்கண அமைப்புகளையும், கவிதை புனையும் இலக்கண அமைப்புகளையும் பண்டிதர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆழ்ந்த கருத்துள்ள சொற்களைத் தெளிவாக விளங்கிக் கொள்வதோடு முன்னைய ஆசிரியர்கள் வழங்கிய கருத்துகளிலும் கவனம் செலுத்தினர். இவற்றுக்கு மேலாக நாடகங்களையும் கவிதைகளையும், கேட்க முடிந்தது.

### செயற்பாடு I

பின்வரும் சட்டகத்தை நிரப்பும்பொழுது, பிரிவெனாக்களில் கற்பிக்கப்பட்ட பாடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கற்பித்தல் தொழில் நுட்பங்களை கவனத்துக் கெடுத்துக் கொள்க.

| பாடவிதானம் | ஆசிரியர் குழு | மாணவர் குழு/குருமார்கள் சாதாரண மாணவர்கள் | கற்பித்தல் முறை |
|---|---|---|---|
| | | | |

பௌத்த கல்வி முறையில் பிரதான கற்றல் முறையானது மரபு ரீதியாக கேட்டல் மூலம் கற்றலாகும். திரிபீடகம் எழுதப்பட்ட பின் குறைந்த அளவிலான நூல்கள் பயன்பாட்டில் இடம் பெற்றது. பின்வரும் இரண்டு கவிதைகள் பௌத்த குருவான, சிறி ராகுல என்பவரால் எழுதப்பட்ட காவிய சேகர நூலிலிருந்து

தரப்படுகிறது. இவை வாதம்புரிதல் கலந்துரையாடல்கள், கேள்வி கேட்டல் என்பன அக்காலத்தில் இக்காலத்தைப் போல் கற்றல் தொழில் நுட்பமாக பயன்படுத்தப்பட்டது, என்பதைச் சிறப்பாக காட்டுகின்றது.

ஆசிரியர் சொல்கின்றவற்றைக் கவனமாகக் கேட்டல், அதனை மனதில் நன்கு பதிவு செய்தல் ஆசிரியர் விசாரணை செய்தல், கேள்வி கேட்டல், அடிக்கடி பாடமாக்குதல், மயக்கம் ஏற்பட்டால் கேட்டல், கருத்துகளை நன்கு அறிதல், எல்லோரும் விடை கூறுதல்.

பண்டைய மன்னர்கள், சமயத்தின் மீது காட்டிய ஊக்கத்தினால், பிரிவெனுக்களின் கல்வி முறை விரைவாக பரவியது. அதன் விளைவாக இலங்கை உயர் கல்விக்கான இடமாக உலகெங்கும் புகழ் பரவியது ஹியுங்சான் இந்தியாவிற்கு 7ம் நூற்றூண்டில் பிரயாணம் செய்தவர். தனது நூலில், இலங்கை கல்விக்கான நிலையம் என புகழ் பெற்றிருப்பதைக் குறிப்பிடுகின்றார். அவர் சமுத்திரத்தின் மத்தியில் சிங்கள என்ற நாடு கற்றலுக்கான மத்திய நிலையமாக புகழ் பெற்றுள்ளது என கேள்விப்பட்டு தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தேரவாத பௌத்த பிரிவைச் சேர்ந்த கல்விபெற்ற பண்டிதர்கள் இருந்ததாகவும், அவர்கள் யோக சாஸ்திரத்தை விளக்கக் கூடியவர்களாகவும் இருந்தனர். அதன் விளைவாக இலங்கை, மிகச் சிறந்த கல்வி மத்திய நிலையமாக விளங்கியது.

நீங்கள் அறிந்து கொள்வதற்காக பண்டைய இலங்கையின் பிரிவினுக்களின் பட்டியல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அநுராதபுரக் கால பிரிவெனுக்கள்

1. மகாவிகாரை — அதனைச் சார்ந்த பிரிவெனுக்கள்

- கலாபசாத் பிரிவெனு
- சுனஹாத பிரிவெனு
- தீக சங்கம பிரிவெனு
- தீக சந்த சேனுபதி பிரிவெனு
- பியங்கு பிரிவெனு
- குப்த வங்க பிரிவெனு
- மயில பிரிவெனு

2. அபயகிரிய — அதனைச் சார்ந்த பிரிவெனுக்கள்.

- ஜேதவனு பிரிவெனு
- உத்துருமுல பிரிவெனு
- மகா கஹறமுல பிரிவெனு
- மகாதுமுமுல பிரிவெனு
- மகனேத் பாமுல பிரிவெனு

3. ஜேதவனய — அதனைச் சார்ந்த பிரிவெணுக்கள்.

- தக்பின முல பிரிவெணு
- சேனுபதி முல பிரிவெணு

4. அஷ்டமுலாயதன — அதனைச் சார்ந்த பிரிவெணுக்கள்.

- உதுறுமுல பிரிவெணு
- மகதும்முல பிரிவெணு
- தக்குணு முல பிரிவெணு
- குல கூறுமுல பிரிவெணு
- மில்கம்முல பிரிவெணு
- மகாகஹறமுல பிரிவெணு
- மகனெத்பாமுல பிரிவெணு
- சேனுபதி முல பிரிவெணு.

**பொல்லநறுவவை பிரிவெணுக்கள்**

| | |
|---|---|
| புஷ்பாராமய | இசிபத்தன |
| தட்ஷிணுராமய | துசித்தாராமய |
| பஸ்சிமாராமய | வேலுவணுராமய |
| உத்தராராமய | ஜேத்தவனராமய |
| கபில வஸ்த்து | திரிவங்க எதுபதலென |

**தம்பதெனியா கோட்டை பிரிவெணுக்கள்.**

| | |
|---|---|
| பிரதிராஜ பிரிவெணு | அனுராதபுரயே சேனுநாத பிரிவேணு |
| மயுரபாத பிரிவெணு | அசத்தன பிரிவெணு |
| நந்தி பிரிவெணு | பஸ்முல பிரிவெணு |
| மகந்தசேனு பிரிவெணு | களனியே உகதாற பிரிவெணு |
| பராக்கிரமபாகு பிரிவெணு | நியங்கம பாயெ ஜெயமகலே சிரு பிரிவெணு |
| பெலிஹல புவனேகபாகு பிரிவெணு | தொரஹமுவே விஜயபாகு பிரிவெணு |
| குருணுகல புவனேகபாகு பிரிவெணு | விதாகம கனுனந்த பிரிவெணு |
| தெவுந்தர நந்தர பிரிவெணு | காறகல பத்மாவதி பிரிவெணு |
| | பப்பிலியானே சுனேந்திரா தேவ பிரிவெணு |

தற்போது உங்களுக்கு இலங்கையின் புராதன கல்வி முறை எவ்வாறுனது என்பது விளங்கியிருக்கும். தொடர்ந்து கற்பதற்குமுன் கீழ்வரும் செவ்வை பார்த்தலைப் பூரணப்படுத்துக.

**செவ்வைபார்த்தல் 1**

கீழே தரப்பட்ட கேள்விகளுக்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவைகளில் மிகப் பொருத்தமானதின் கீழ் கோடிடுக.

1. குருவீட்டில் பெற்றுக் கொள்ளப்பட்டது.
   அ) முறைசார்ந்த கல்வி.
   ஆ) முறைசாரக் கல்வி.
   இ) அடிப்படைக் கல்வி.
   ஈ) சாதாரண கல்வி.

2. குருவீட்டில் எழுத்துக் கற்றல் ஆரம்பமானது.
   அ) கற்பலகையில் எழுதுவது.
   ஆ) மணலில் எழுதுவது.
   இ) கரும்பலகையில் எழுதுவது.
   ஈ) கடதாசியில் எழுதுவது.

3. பன்சல (பௌத்த கோவிலில்) வில் பெற்றுக் கொள்ளப்பட்ட கல்வியில் முதலிடம் பெற்றது.
   அ) கலைத்துறை
   ஆ) தேசிய துறை
   இ) சமயத் துறை
   ஈ) வெளிநாட்டுத்துறை.

4. பன்சலவினுல் (பௌத்தகோவில்களால்) வழங்கப்பட்டது.
   அ) இலவசக் கல்வி
   ஆ) கட்டாயக் கல்வி.
   இ) கலைக் கல்வி
   ஈ) விஞ்ஞானக் கல்வி.

5. பிரிவெனுக்களின் கல்விப் பாடவிதானத்தில்
   அ) சமயப் பாடங்கள் உள்ளடக்கப்பட்டது.
   ஆ) கலைப்பாடங்கள் உள்ளடக்கப்பட்டது.
   இ) பல்வேறு பாடங்கள் உள்ளடக்கப்பட்டது.
   ஈ) சாதாரண விடயங்கள் உள்ளடக்கப்பட்டது.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

தற்போது வெளிநாட்டு ஆதிக்கதில் இலங்கையில் பாடசாலை அமைப்பு முறை ஒழுங்குபடுத்தும் விதம் பற்றி உங்களது கவனம் செலுத்தப்படுகின்றது.

# 4.0 வெளிநாட்டு ஆதிக்கம்

*16* ஆம் நூற்றுண்டிலிருந்து இலங்கை மூன்று வேறுபட்ட வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது.

- போர்த்துக்கீசர் *1505 — 1658*
- ஒல்லாந்தர் *1658 — 1796*
- பிரித்தானியர் *1796 — 1948*

## 4.1 போர்த்துக்கீசர் காலப் பாடசாலைகள்

போர்த்துக்கீசர் காலத்தில் காணப்பட்ட கல்விமுறையில் சில விசேட பண்புகள் காணப்பட்டன.

- முழுவதும் சமயக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான கல்வியை வழங்குதல்.
- மதகுருமார்களே அதிகமாக கல்வி வழங்குதலில் ஈடுபட்டிருந்தனர்.
- கல்விச் செயல்பாடுகள் மதகுருமார்களின் பொறுப்பாக இருந்தது.

அடிப்படையிலே பாடசாலை அமைப்புக்கள் மிசனறிகளைச் சேர்ந்த மதகுருமார்களின் பொறுப்பிலேயே இருந்தது. இலங்கையில், சமயக் கல்வி வேலைகளில் ஈடுபடுவதற்கு போர்த்துக்கல் நாட்டிலிருந்து நான்கு சமயப்பிரிவுகளை சேர்ந்த மதகுருமார்கள் இங்கு வருகை தந்தார்கள்.

அ) பிரான்சீஸ்கன் சபை மதகுருமார்கள்.
ஆ) யேசுசபை மதகுருமார்கள்.
இ) டொமினிக்கன் சபை மதகுருமார்கள்.
ஈ) ஒகஸ்தீனியன் சபை மதகுருமார்கள்.

இச்சமயப் பிரிவுகள் சபைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலைகளும் கற்பித்தல் வழிகளுக்கும் கீழ்தரப்படும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவைகளைப் படியுங்கள்.

| சமயப் பிரிவு | பாடசாலை வகை | பாடவிதானம் |
| --- | --- | --- |
| பிரான்சிஸ்சன் சபையினர். | பரிஸ்பாடசாலை (கோவில் பற்று பாடசாலைகள்) (கிராமப் பாடசாலை எல்லா சமயத்தவர்களுக்கும்) | வாசித்தல்<br>எழுதுதல்<br>சமயம் |

**கல்லூரிகள் மூன்று**

- 1 கொழும்பு
- 2 யாழ்ப்பாணம்
- 3 ஹேறவாகம் கோரளை
  - வாசித்தல்
  - எழுதுதல்
  - சமயம்
  - பாடுதல்
  - லத்தீன்
  - நன்நடத்தைக்கல்வி

**பாடசாலைகள்.**

- யேசு சபையினர்
  - கீழ்மட்டம்
    - வாசித்தல்
    - எழுதுதல்
    - சமயம்
    - பாடுதல்
  - இடைமட்டம் (இடைநிலைப் பாடசாலைகளும் சாதாரண பாடசாலைகளும்)
    - போத்துக்கீச மொழி
    - சுயமொழி
    - மானிடவியல்
    - அலங்கார சாஸ்திரம்
  - உயர்மட்டம் (செமினரி)
    - ஒழுக்கக்கல்வி
    - லத்தீன்மொழி
    - சமயம்.
- டொமினிக்கன் சபையினர்
  - பரிஸ் (கோவில் பற்றுப் பாடசாலைகள்)
    - கொழும்பு
    - காலி
    - சப்பிரகமுவ
    - இரு கோறளை
    - யாழ்ப்பாணம்
- ஒகஸ்தீனியன் சபையினர்
  - பரிஸ் கோவில் பற்றுப் பாடசாலை)
    - கொழும்பு
    - அண்மையிலுள்ள பிரதேசங்கள்.

மேல்வரும் குறிப்புகளைக் கற்கும்பொழுது பிரதான கல்வி நிறுவனங்களாக பரிஸ் பாடசாலைகளும் கல்லூரிகளும் காணப்பட்டன என்பது தெளிவாகின்றது. மேலும் பிரான்சிஸ்கன் சபையினரின் பரிபாலனத்திலிருந்த பாடசாலைகளிலும் பார்க்க யேசுசபையினரின் பாடசாலைகள் பரந்த அடிப்படையில் நடைமுறைப் படுத்தினர் என்பது தெளிவாகின்றது.


போர்த்துக்கீசர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் செயற்பாடுகள் யாவும் கத்தோலிக்க மத குரு மார்களின் பொறுப்பில் இருந்ததுடன் அவர்கள் அதனை பெரும்பாலும் கத்தோலிக்க சமயப் பிரசாரத்துக்காகவே பயன்படுத்திக் கொண்டனர். போர்த்துக்கீச பாடசாலை அமைப்பு முறையின் விசேட இலட்சணங்களை அவதானித்த நாம் தற்போது ஒல்லாந்தர் கால பாடசாலை அமைப்புமுறையில் அவதானத்தைச் செலுத்துவோம்.

## 4.2 ஒல்லாந்தர் கால பாடசாலைகள்.

ஒல்லாந்தர் கால கல்வி முறையில் காணப்பட்ட குறிக்கோள்கள்.

- சுதேசிகளை புரட்டஸ்தாந்து சமயத்துக்கு மாற்றிக் கொள்ளல்.
- புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவிய மக்களுக்கு எழுத்து வாசிப்பு என்பவற்றுக்கான அடிப்படைக் கல்வியை வழங்கல்.
- ஒல்லாந்தருக்கு சார்பான ஒரு குழுவினரை உருவாக்குவதன் மூலம் அரசியல் நிலையைப் பலப்படுத்திக் கொள்வது.

இந்தக் குறிக்கோள்களை இலக்குகளாகக் கொண்டு ஒல்லாந்தர்கள் அமைத்துக் கொண்ட கல்வித்திட்டம் பின்வருமாறு அமைந்தது.



ஒல்லாந்தரினால் நிறுவப்பட்ட பாடசாலைகளின் கல்வி அமைப்பிலிருந்து தெளிவாக விளங்கும் அம்சம் என்ன வெனில் அவர்களது கல்வி முறை எற்கனவே உறுதி யான ஒரு திட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்பதாகும். அரசின் முறையான நிர்வாக அமைப்பின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி கீழ்வரும் முறையில் அமைந்திருந்தது. நாடுமுழுவதும் நிறுவப்பட்டிருந்த பரிஸ் பாடசாலைகள் ஸ்கொலாக்கல் கொமிஷன் என் னும் நிருவாக சபையினால் நிர்வகிக்கப் பட்டதோடு அவைகளினால் அடிப்படைக்கல்வி தாய் மொழியில் வழங்கப்பட்டது. கல்வி கட்டாயக் கல்வியாக பதி னைந்து வயது வரையும் அமுலாக்கப்பட்டது. நிர்வாக சபையின் பரிசோதகர்கள் ஒழுங்கு முறையாக பரிசோ தனைகளை மேற்கொண்டமையினால் பாடசாலைகள் நல்ல முறையில் பரிபாலிக்கப்பட்டன. திறமைசாலிகளான நுண்ணறிவு படைத்த மாணவர்களுக்கு செமினரிகளில் உயர்கல்விக்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதுடன் சமயகுருமார்களாக வர விரும்புவர்களுக்கு ஒல்லாந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் சந்தர்ப்பம் வழங்கப் பட்டது. இம்முறையின் இன்னொரு விசேட பண்பு என்னவெனில் பரிஸ் பாடசாலையின் தலைமை ஆசிரியர் களுக்கு தோம்புகளை வைத்து பேணுகின்ற பதவி களும் வழங்கப்பட்டது. ஒல்லாந்தர் காலத்திலிருந்து நிர்வாக முறையில் இலங்கையிலிருந்த மிகவும் முக்கிய கிராம அதிகாரி தோம்புகளை வைத்திருப்பவர்களே யாவர். பாடசாலைப் புத்தகங்கள் அச்சிலிடுவதோடு பைபிளை சுதேச மொழிகளில் மொழி பெயர்த்து அச்சிடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலே தரப்பட்ட விடயங்களை மேலும் உறுதிப்படுத் திக் கொள்வதற்காக கீழ் தரப்படும் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**செயற்பாடு 2**

நீங்கள் இதுவரை கற்றதிலிருந்து நீங்கள் மேற்கொள்ள வேண்டியது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தி லிருந்து அமைப்பு முறைகளின் விசேட பண்புகளை ஒப்பிடுவதாகும். அதில் உங்களுக்கு இரண்டு வகையான அமைப்புகளில் ஒத்த ஒவ்வாத பண்புகளை நீங்கள் காண்பீர்கள். உங்களுக்கு உதவியாக ஒரு உதாரணம் தரப்பட்டுள்ளது. அதனைப் பின்பற்றி ஒத்த பண்புகள் நான்கினையும் ஒவ்வாத பண்புகள் நான்கினையும் எழுதி அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| ஒத்த பண்புகள் போர்த்துக்கீசர் | ஒல்லாந்தர் |
|---|---|
| 1 சமயப் பிரச்சாரம் | 1 சமயப் பிரச்சாரம் |
| 2 .......................... | 2 .......................... |
| 3 .......................... | 3 .......................... |
| 4 .......................... | 4 .......................... |
| 5 .......................... | 5 .......................... |

**ஒவ்வாத பண்புகள்**

| போர்த்துக்கீசர் | ஒல்லாந்தர் |
|---|---|
| 1 ........................... | 1 ........................... |
| 2 ஒழுங்கான திட்டம் இன்மை | 2 ஒழுங்கான திட்டம் இருத்தல். |
| 3 ........................... | 3 ........................... |
| 4 ........................... | 4 ........................... |
| 5 ........................... | 5 ........................... |

போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் கால கல்வி அமைப்பின் பண்புகளை அறிந்து கொண்ட உங்களுக்கு தற்போது பிரித்தானியர் கால கல்வி அமைப்பினை பற்றி கற்க சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

## 4.3 பிரித்தானியர் கால பாடசாலைகள்

இலங்கையின் முதலாவது தேசாதிபதியான நோர்த் படைகளுக்கு பிரதான மதகுருவான ஜேம்ஸ் கோர்டினருடன் சேர்ந்து தயாரித்த பாடசாலை அமைப்பு முறை கீழே தரப்படுகின்றது.

1. ஒல்லாந்த பரீஸ் பாடசாலைகள்
   - வாசிப்பு
   - எழுதுதல்
   - எண்கணிதம்
   - கிறித்தவசமயம்
   
   } தாய்மொழி மூலம்

2. உயர் பாடசாலை
   - ஆரம்பப்பாடசாலை (8 வருடக்கல்வி)
     - உயர்கல்வி வழங்கல்
     - அகெடமிக்கு அனுமதித்தல்
     
     } ஆரம்ப ஆங்கில கல்வி
   - அக்கடமி (செமினரி)
     - சிங்களம்
     - தமிழ்
     - ஐரோப்பிய
     
     } அரசசேவைக்கு இளைஞர்களைத் தயார்படுத்தல்
     
     } பல்கலைக்கழகக் கல்விக்கான இங்கிலாந்துக்கு அனுப்ப புலமைப் பரிசில் வழங்க கூடியவர்களை தெரிவு செய்தல்

3. ஒல்லாந்தர் அநாதை விடுதிகளை புனரமைத்தல் — ஐரோப்பியர்களுக்கு பிறந்த பிள்ளைகளை அரச செலவில் வளர்ப்பதற்கு பயனுள்ள தொழில் பயிற்சியளிப்பதற்குமாக அமைக்கப்பட்டது.

பாடசாலை முறையில் 1812க்கு பின் சகல மிசனரி மார்கள் வந்ததனால் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நான்கு மிசனரிகள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. இம்மிசனரிகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட பாடசாலை அமைப்பு முறையானது பின்வருமாறு:

1. **பப்ரிஸ்ற் மிசனரி சபையினர்**

| | | | |
|---|---|---|---|
| அ. | தாய்மொழி பாடசாலைகள் | தாய்மொழியில் இலவசக்கல்வி | ஆங்கிலம் போர்த்துக்கீசர் தமிழ்மொழி |
| ஆ. | ஆங்கிலப் பாடசாலைகள் | கட்டணம் அறிவிடப்பட்டது. | சிங்களம் கிறிஸ்தவம் கணிதம். |
| இ. | பெண்கள் பாடசாலை | | |

2. **வெஸ்ரியன் மிசனரி சபையினர்.**

| | | |
|---|---|---|
| அ. | தாய்மொழிப்பாடசாலைகள்(தீவுமுழுவதும்) | சமயத்தைவிரைவாக பரப்புதல் |
| ஆ. | ஆங்கிலப் பாடசாலை (கொழும்பு, நீர்கொழும்பு, காலி சமுத்துறை, யாழ்ப்பாணம்) | கிறிஸ்தவம், வாசிப்பு, எழுத்து, கணிதம். |
| இ. | ஞாயிறு பாடசாலை | கிறிஸ்தவ சமயத்தை ஏழைப்பிள்ளைகளுக்கு கற்பித்தல். |
| ஈ. | அகெடமி | ஆங்கில மொழியில் உயர் கல்வி வழங்கல் |

3. **அமெரிக்கன் மிசனரி சபையினர்**

| | | |
|---|---|---|
| அ. | இலவச கிராமப் பாடசாலைகள் | தமிழ் மொழியில் ஆரம்பக்கல்வி இலவசமாக வழங்கப்பட்டது. |
| ஆ. | இலவச விடுதிப் பாடசாலைகள் | உணவு, உடை, யாவும் இலவசமாக கொடுக்கப்பட்டது. இலவசக் கல்வி. |

| | |
|---|---|
| இ. மத்திய பாட சாலைகள் | தாய் மொழிப்பாட சாலைகளிலிருந்து வரும் நுண்மதியுள்ள பிள்ளைகளை ஆசிரியத் தொழிலுக்காக பயிற்சி அளித்தல். |
| ஈ. வட்டுக்கோட்டை (செமினரி) (உயர் கல்விக்காக) | நுண்மதிப்படைந்த பிள்ளைகளுக்கு விடுதிப்பாடசாலையாக அமைந்தது. |

**4. திருச்சபைப்பாடசாலை (யாழ்ப்பாணம், நல்லூர், கண்டி)**

| | |
|---|---|
| அ. கிராமப்பாடசாலை | தாய்மொழியில் உள்ளூர், சாதாரண மக்களுக்கு கல்வி வழங்கப்பட்டது. |
| ஆ. மத்திய பாடசாலைகள். | ஆங்கிலம் வாசிப்பு, எழுதுதல் கட்டுரை எழுதுதல் எண்கணிதம் புவியியல். |
| இ. விடுதிப்பாடசாலை | கோட்டே, பத்தேகம, நல்லூர். |
| ஈ. கோட்டே கல்லூரி | மத்திய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நுண் மதி படைத்த மாணவர்களுக்கு. |
| உ. பெண்கள்பாடசாலைகள் | பத்தேகம நல்லூர். கோட்டே. |

1830 ல் இலங்கையிலிருந்த பாடசாலைகள் வகைகளும் மாணவர் தொகையும்

| பாடசாலை வகை | முழுத்தொகை | மாணவர் தொகை | மாணவர் விகிதம். |
| --- | --- | --- | --- |
| மிஷனரிப் பாடசாலைகள். | 236 | 9,274 | 47 |
| அரசுப்பாடசாலைகள் | 97 | 1,914 | 10 |
| தனியார் பாடசாலைகள் (ஆங்கிலக் கல்விக்காக) | 640 | 8,425 | 43 |

கல்வி நிலை இவ்வாறு இருக்கும் பொழுது கோல்புறூக் ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வந்திருந்தனர்.

கல்வி தொடர்பாக இவ் ஆணைக்குழு முன் வைத்த ஆலோசனைகளில் இரு பிரதான பண்புகள் காணப் பட்டன.

- இலங்கையிலுள்ள சகல அரச பாடசாலைகளையும் நிர்வகிப்பதற்கு மத்திய அமைப்பொன்றினை நிறுவுதல்.
- ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் பாடசாலைகளை ஆரம்பித்தல்.

1834 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பாடசாலை ஆணைக் குழு 1841 ல் கலைக்கப்பட்டு மத்தியபாடசாலை ஆணைக் குழு நிறுவப்பட்டது. இந்த ஆலோசனைகளால் ஆங் கிலக் கல்விக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளிக்கப் பட்டதாக தெரிகின்றது.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பாட சாலை அமைப்பு முறையின் முக்கிய காலகட்டம் உருவா குவது 1865 ல் நியமிக்கப்பட்ட மோர்கன் ஆணைக்குழு வின் ஆலோசனையின் பின்பேயாகும்.

அவ் ஆணைக்குழு முன்வைத்த ஆலோசனைகள் பின்வரும் முறையில் செயல்படுத்தப்பட்டது.

i பொதுக் கல்விப்போதனைப் பணிப்பாளர் என்ற பிரதான அதிகாரியின் கீழ் பொதுக்கல்விப் போதனைத்திணைக்களம் 1960 ல் நிறுவப்பட்டது. இதன் முழுக்கல்வி நிர்வாகம் இத்திணைக்களத் தினிடம் ஒப்படைக்கப்பட்டது.

ii மிசனரிப் பாடசாலைகளுக்கு அரச நன்கொடை வழங்கப்பட்டது.

iii முழுத்தீவும் மூன்று கல்விப்பரிசோதனை மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் பிரதான பரிசோதகர்கள் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்கள்.

iv ஆரம்ப கல்விக்காக சிங்கள, தமிழ் ஆகிய சுய மொழி பாடசாலைகளை மேலும் அபிவிருத்தி செய்தல்.

v ஆங்கிலப் பாடசாலைகள் நிறுவுவதும் ஆங்கிலக் கல்வியின் விரிவாகத்துக்கு, தனியார்துறையினரிடமும் மிசனரிகளிடமும் ஒப்படைத்தல்.

vi 1870 ன் பின் உதவி நன்கொடை வழங்குவதன் கீழ் பௌத்த, இந்து பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இவ் ஆலோசனைகளின் விளைவாக, பாடசாலைகளின் தொகை அதிகரித்தமை குறிப்பிடத் தக்கதாகும். அவை, அரச பாடசாலைகளுக்காகவும் உதவி நன்கொடை பெறும்பாடசாலைகளாகவும்விளங்கின இதனை 1870 - 1900 ஆண்டுகளுக்கிடையில் அரசினாலும் உதவி நன்கொடை பெறும் சமயப்புரிவுகளாலும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் அட்டவணையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

| | 1870 | 1880 | 1890 | 1900 |
|---|---|---|---|---|
| அரசபாடசாலை | 156 | 369 | 436 | 500 |
| உதவி நன் கொடை பெறும் பாடசாலை | 229 | 833 | 984 | 1328 |

1900 ஆண்டில் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ( நிர்வாக ஒழுங்குகளுக்கேற்ப )

| நிர்வாகம் | பாடசாலைகளின் தொகை | மாணவர்கள் தொகை |
|---|---|---|
| அமெரிக்க மிசனரிசபை | 129 | 9455 |
| பப்ரிஸ் மிசனரிசபை | 25 | 2048 |
| பௌத்தம் | 142 | 8700 |
| இங்கிலாந்து சபை ( C.M.S ) | 176 | 11378 |
| இங்கிலாந்து ( Diocese ) | 148 | 11658 |

| | | |
|---|---|---|
| தனியார் | 20 | — |
| இந்து | 45 | 6560 |
| பிரஸ்பிரற்றியன் | 02 | 347 |
| கத்தோலிக்க | 336 | 36118 |
| வெஸ்லியன் | 307 | 24128 |
| முஸ்லீம் | 40 | 362 |
| | 1328 | 12, 0751 |

மேலே தரப்பட்ட அட்டவணையிலிருந்து தெரியவருவதாவது, உதவி நன்கொடை வழங்கும் திட்டத்தால் கிறிஸ்தவ மிசனரிகள் அதிக நன்மை அடைந்தது என்பதாகும். 20 ம் நூற்றாண்டின் அரம்பத்தில் கிறிஸ்தவ மிசனரிகள் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ஏனைய சமயத்தினரை விட சிறந்த இடத்வைப் பெற்றிருந்தனர். 1912 ல் பொதுக்கல்விப் போதனைத்திணைக்களம். கல்வித் திணைக்களமாக ஒழுங்கமைக்கப்பட்டது.

19 ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இடம் பெற்ற மாற்றங்களைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்வது பயனுடையதாகும்.

### 1 கல்வியில் பௌத்த மறுமலர்ச்சி

இக்கால கட்டத்தில் கிறிஸ்தவ மிசனரிகள் பாடசாலைகள் உள்ளூர் வாசிகளை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றும் முக்கிய மூலமாக இயங்கியது. மீகெட்டுவத்தை குணனந்த தேரோ ஹிக்கடுவை சிறி சுமங்கல தேரோ போன்ற தேசியபற்று வாய்ந்த பௌத்த மதகுருமார்கள் முன்வந்து பௌத்த சமயத்தையும் பௌத்த மக்களையும் தாழ்நிலையில் இருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டனர். அமெரிக்காவிலிருந்து வந்த கேர்ணல் ஒல்கட் பௌத்த பிரம்ம ஞானசங்கத்தை ஆரம்பித்து (1885) இலங்கையில் பௌத்த சமயத்துக்கான மறுமலர்ச்சிக்கு உறுதியான நடவடிக்கைகளை எடுத்தார். பௌத்த சூழலில் இலங்கையருக்கு இன்றும் உயர் கல்வி வழங்கும் முக்கிய நிலையமாக அதி சிறந்த சேவையாற்றும் கொழும்பு, ஆனந்தக் சல்லூரி. காலி மகிந்த, கண்டி தர்மராஜ போன்ற கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து அண்மையிலுள்ள நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் பல பௌத்த பாடசாலைகளை நிறுவி பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்குவழி கோலினர்கள். அத்துடன் பௌத்த சமயம் விரைவாக வளர்ச்சியடைந்து 19 ம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டில் அநகாரிக தர்ம பாலாவின் முயற்சிகளால் பௌத்த சமயக்கல்வி விரைவாக பரவியதோடு மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. 20 நூற்றாண்டில் ஆரம்பத்தில் உதயமான தேசிய விடுதலை முன்னணி உருவாக்குவதற்கு பலம்வாய்ந்த ஒரு அடிப்படையானது எனக் கூறலாம்.

## 2 இந்து சமய மறுமலர்ச்சி

ஆறுமுக நாவலரின் கீழ் வடபகுதியில் இந்துசமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. 19 ம் நூற்றுண்டு முடிவடையும் போது இந்து சமயப் பாடசாலைகள் பல ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

## 3 இஸ்லாமிய மறுமலர்ச்சி

இம் முயற்சியில் முன்னணியில் செயல்பட்டவர் எம்.சி சித்தி லெப்பையாவர். 1891 ல் முதன் முதலாக ஒரு பாடசாலை கண்டியில் ஆரம்பிக்கப்பட்டது. 1892 ல் கொழும்பு சாகிரா கல்லூரியும் 1895ல் கம்பளை சாகிரா கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது.

## 4 தேசிய எழுச்சி

வெளிநாட்டு ஆதிக்கத்துக்கு எதிராக எழுச்சி பெற்ற உள்நாட்டுச் சக்திகள் காரணமாக, தேசிய எழுச்சியும் தேசிய பற்றும் வளர்ச்சியடைந்தது. (நீங்கள் கற்றுள்ள இலங்கை வரலாற்றுனூடாக இது தொடர்பான மேலதிகமான விளக்கங்களை ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுங்கள்) இவ்வாறுன சமய கலாசார அமைப்புகள் தத்தமது முயற்சிகளை வெவ்வேருக மேற்கொண்டாலும் அடிப்படைக் கட்டாயக் கல்விக்கு அதிக சந்தர்ப்பங்களை வழங்குதல் உயர் கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்கான வசதியினை நாட்டில் ஆரம்பித்தல் போன்றவற்றின் மீது அரசின் அவதானத்தை ஈர்ப்பதற்கு அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

19 ம் நூற்றுண்டின் இறுதியில் பௌத்த இந்து பாடசாலைகளின் பரம்பலைக் கீழ்காணப்படும் புள்ளி விபரங்களிலிருந்து விளங்கிக் கொள்ளுங்கள்.

<u>பௌத்த பாடசாலைகளின் பரம்பல்</u>

| வருடம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| *1880* | *04* | *246* |
| *1885* | *08* | *734* |
| *1890* | *18* | *1761* |
| *1895* | *52* | *6261* |
| *1900* | *142* | *18700* |

இந்து பாடசாலைகளின் பரம்பல்

| வருடம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1880 | 01 | 167 |
| 1885 | 04 | 378 |
| 1890 | 06 | 661 |
| 1895 | 30 | 4600 |
| 1900 | 45 | 5000 |

20 ம் நூற்றுண்டு ஆரம்பத்தில் பாடசாலைக்கு செல்வது கட்டாயமாக்கப்பட்டமை ஒரு முக்கிய பண்பாகும். இந் நூற்றுண்டின் ஆரம்ப 30 வருடங்களில் அரச, உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் பரம்பல் கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | அரச பாடசாலைகளின் தொகை | உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் தொகை |
|---|---|---|
| 1905 | 554 | 1,582 |
| 1910 | 759 | 1910 |
| 1915 | 824 | 2,072 |
| 1921 | 971 | 2,120 |
| 1924 | 1121 | 2,076 |
| 1930 | 1215 | 2,505 |

1921 ம் ஆண்டு சனவரி 1 ல் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இது கலை விஞ்ஞானத் துறைகளை உள்ளடக்கியதாக இருந்தது. இலண்டன் பல்கலைக்கழக பட்டத்துக்கு வெளிவாரி நிறுவனமாக 1940 வரையும் செயல்பட்டு வந்தது. 20 நூற்றுண்டின் ஆரம்ப 30 வருடங்களில் உதவி நன்கொடை பெறும் பாடசாலை முறை தொடர்ச்சியாக நடைமுறையிலிருந்து வந்தது. 1921ன் பின் அரச பாடசாலைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து தீவு முழுவதற்கும் கல்வி வசதி அளிப்பதில் அரசுக்கும் சமய அமைப்புகளுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தன. அரசு சகல சமய அமைப்புகளினதும் உதவியினை ஏற்றுக் கொண்டமையினுல் சமய அமைப்புகளை ஆரம்பித்த உதவி பெறும் பாடசாலைகளுக்கு கல்வித்துறையில் பிரதான இடம் கிடைத்தாலும் அதிக சலுகைகள் கிறிஸ்தவ மிசனரிகள் சபைகளுக்கு கிடைத்தன. இதுவரை நீங்கள் கற்ற விடயங்கள் மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கீழ் வரும் செவ்வைபார்த்தலில் கவனம் செலுத்துங்கள்.

கீழ்வரும் வினுக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளில் பொருத்தமானதின் கீழ் கோடிடுக.

**செவ்வைபார்த்தல் 2**

1 ஒல்லாந்தர் அமைத்த பாடசாலை அமைப்புமுறை போர்த்துக்கீசர் அமைத்த பாடசாலை அமைப்பு முறையிலும் பார்க்க.

அ. பரந்த ஒன்ருக இருந்தது

ஆ. ஒழுங்கமைக்கப்பட்டதொன்ருக இருந்தது.

இ. வரையறைக்குட்பட்டதொன்ருக இருந்தது.

ஈ. அடிப்படையற்றதொன்ருக இருந்தது.

2 ஆங்கில ஆட்சி ஆரம்பத்தில் இலங்கையில் காணப் பட்ட பாடசாலையின் பிரதான இடத்தைப் பெற்றது.

அ பௌத்த பாடசாலைகளாகும்

ஆ ஒல்லாந்த பாடசாலைகளாகும்

இ தனியார் பாடசாலைகளாகும்

ஈ மிசனரிப் பாடசாலைகளாகும்

3 1830 ல் இலங்கையில் காணப்பட்ட பாடசாலை களின் முழு எண்ணிக்கை.

அ 640 ஆகும்

ஆ 973 ஆகும்

இ 236 ஆகும்

ஈ 97 ஆகும்

4 1865 லிருந்து 1900 ஆண்டுவரையிலான விசேட பண்பாக அமைந்தது.

அ ஒரு முகப்படுத்தப்பட்ட நிர்வாகம்

ஆ மிசனரிகளின் நிர்வாகம்

இ இருவகையான நிர்வாகம்

ஈ அரச நிர்வாகம்

5 19ம் நூற்ருண்டின் இறுதியில் கல்வி புனரமைப்பு ஆலோசனைகளைவேண்டி நின்றவர்களில் முன்னணி யிலிருந்தவர்கள்.

அ பௌத்த இந்து மறுமலர்ச்சியாளர்கள்.

ஆ மிசனரிகளில் ஊக்கமுள்ள்வர்கள்.

இ அரசின் கொள்கையாளர்கள்.

ஈ தனியார் நிறுவனங்களை நடத்துவோர்கள்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

இலங்கையின் கல்வி வரலாற்றில் மிகமுக்கியமான மாற் றம் ஏற்பட்ட காலத்தில் உங்கள் அவதானத்தை செலுத்துங்கள்.

## 5.0 1943 ஆம் ஆண்டு கல்வி விஷேட குழுவின் அறிக்கை

( சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர அறிக்கை )

*1931* தொடக்கம் இலங்கையில் செயற்படுத்தப்பட்ட டொனமூர் ஆணைக்குழு அரசியலமைப்பின்படி நிர்வாக அமைப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன முதன் முதலாக சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க சபைக்கு பலநிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இவ்வமைப்பின் கீழ் நிறுவப்பட்ட நிர்வாகக் குழு அரசியல் அமைப்பு முறையில் கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலியவற்றின் நிர்வாக அதிகாரங்கள் முதன் முதலாக சுதேசிகளான அமைச்சர்களின் கையில் ஒப்புவிக்கப்பட்டதான கல்வி பற்றி மிக முக்கிய புனரமைப்புக்கள் ஏற்பட்டமை இங்கே மிக முக்கிய - ஒரு விளைவாக அமைந்தது. அப்போது கல்வி பற்றிய நிர்வாகக் குழுவின் தலைவராக இருந்த சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்கள் தலைமையில் கல்விப் புனரமைப்பு ஆணைக்குழு நிறுவப்பட்டது. கன்னங்கரா குழுவினால் தமது ஆலோசனைகள் எடுத்துக் கூறப்படுவதற்கு முன் அக்காலத்தில் கல்வியில் காணப்பட்ட சில குறைபாடுகள் அவர்களுக்குச் சுட்டிக் காட்டப்பட்டன. அவைகள் பின்வருமாறு :-

i நாட்டின் கல்வி நிர்வாகத்தின் ஒருமைப்பாடு இல்லாதிருத்தல்,

ii நாட்டின் கல்வி மொழியடிப்படையில் வகைப் படுத்தப்பட்டிருத்தல்.

iii பாடசாலைகளின் பாடவிதானம் சாஸ்திரக் கல்வியைச் சார்ந்திருத்தல்.

iv கல்வியில் சமசந்தர்ப்பங்கள் சகலருக்கும் கிடைக்காதிருத்தல்.

v கட்டாயக் கல்விச்சட்டம் அமுலில் இருந்தாலும் அது உரிய முறையில் செயற்படுத்தப்படாமை.

இக்குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக முன் வைக்கப்பட்ட ஆலோசனைகள்.

i அரசினதும், மதக்குழுக்களினதும் ஒத்துழைப்புடனை. ஒரு கல்விமுறையை நடைமுறைப்படுத்தல்.

ii பாடசாலையில் கற்பித்தல் மொழி, தாய்மொழியாக இருத்தல்.

iii பாடசாலையில் கற்கும் சகல சமயத்தைச்சேர்ந்த மாணவர்கட்கும் சமயக் கல்வி வழங்குதல்.

iv சம கல்வி வசதிகளை மாணவர்கட்கு வழங்குதல் ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை கட்டணம் அறவிடப்படாத இலவசக் கல்வியை மாணவர்கட்கு வழங்குதல்.

v ஆசிரியர் பயிற்சிக்காக விசேட நிறுவனங்களை அமைத்தல், பட்டதாரி ஆசிரியர்களின் பயிற்சி நெறிகளை பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

vi பாடசாலை ஆமைப்பு முறையானதாகவும் நாட்டின் பல்வேறுவகைப்பட்ட தேவைகட்கும் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். அதற்காக எடுத்துக் கூறப்பட்ட பாடசாலை அமைப்பு முறையை கீழ்வரும் குறிப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

ஆரம்பப் பாடசாலை ஆறு வருடங்கள்
(வரு 5 – 11 வரை)

மொழிமூலம் தாய்மொழி மூன்றும்தரத்திலிருந்து ஆங்கிலம் கட்டாயமானது ஐந்தாம் தரத்தில் தெரிவுப் பரீட்சை.

| இடை நிலைப் பாடசாலை | சிரேஷ்ட பாடசாலை | பயிற்சிப் பாடசாலைகள் |
|---|---|---|
| இடை நிலைப் பாடசாலை கீழ்ப்பிரிவு 3 வருடம் (தாய்மொழி அல்லது இரு மொழிகள்) | சிரேஷ்ட பாடசாலை கீழ்ப்பிரிவு 3 வருடம் (தாய்மொழி அல்லது இரு மொழிகள்) | பயிற்சிப் பாடசாலைகள் கீழ்ப்பிரிவு 5 வருடம் (தாய்மொழி அல்லது இரு மொழிகள்) |
| இருவருட உயர்பிரிவும் உயர்பாடசாலை தரா தரப்பத்திரத்துக்குமாக மேலும் இருவருடங்கள் (தாய்மொழி, ஆங்கிலம் அல்லது இரு மொழிகள்) | இருவருட உயர்பிரிவு (தாய்மொழி ஆங்கிலம் அல்லது இருமொழிகள்) | இருவருட உயர் பயிற்சிப் பாடநெறி (மொழிமூலம் முன்போல) |
| பல்கலைக்கழகமும் தொழில் நிறுவனங்களும் | நுண்கலைத் தொழில் நுட்பபாடசாலைகள் | விவசாய, தொழிற்பாட சாலைகள். |

ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தல்

i அரசினதும் மதக்குழுக்களினதும் ஒத்துழைப்புடனுல் ஒரு கல்விமுறையை நடைமுறைப்படுத்தல்.

ii பாடசாலையில் இருக்கும் சகல சமயத்தைச் சேர்ந்த மாணவர்கட்கும் சமயக்கல்வி வழங்குதல்.

iii தனியார் பாடசாலைகள் அரசின் கல்விக்கொள் கையைப் பின்பற்றுதல்.

iv தாய்மொழி கற்பித்தல் மொழியாக இருத்தல்.

v 3-ம் தரம் தொடக்கம் ஆங்கிலத்தை கட்டாய இரண்டாம் மொழியாக்குதல்.

vi இலவசக் கல்வியினை ஆரம்பத்தில் ஒரு தேர்தல் மாவட்டத்தில் ஒவ்வொன்றாக நிறுவப்பட்ட மத்திய மகாவித்தியாலயங்களை அடிப்படையாகக் கொள்ளும் இலவசக்கல்வி ஆரம்பிக்கப்பட்டது.

vii ஆலோசிக்கப்பட்ட பாடசாலை அமைப்பு இவ்வாறு மாற்றப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது.

சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலை — சிரேஷ்ட பயிற்சிப் பாடசாலை

14வருடத்தில் 8ம் தரத்தில் தெரிவுப்பரீட்சை வருடம் 5-14 வரை பொதுக்கல்வி.

viii ஆசிரியர் பயிற்சிக்காக புதிய அமைப்பில் பயிற்சிக்கலாசாலைகள் என்ற பெயரில் நிறுவனங்களை அமைத்தல்.

கன்னங்கர குழுவின் சிபார்சுகளினால் இலங்கையின் கல்வியில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன எனக்கூறலாம். இலவசக் கல்வி மூலம் கிராமப் புறங்களில் வாழ்ந்த அதிக மாணவர்கட்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. தாய்மொழி மூலம் கல்வி வழங்கப்பட்டமை மற்றொரு சிறந்த கல்விக் கொள்கையாகும். பயிற்சிக் கலாசாலைகளைப் புனருத்தாரணம் செய்தமை கல்வி அமைப்பினை பன்முகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை போன்ற இவைகளே நாட்டின் கல்வியின் பெரும் தாக்கம் ஏற்படுத்திய புனருத்தாரண வேலைகளாகும்.


மத்திய மகாவித்தியாலயங்கள் நிறுவப்பட்டமையால் கிராமப்புற மாணவர்கள் பெற்ற கல்வியின் பாடத் துறைகள் விரிவுபடுத்தப்பட்டன. ஆரம்பத்தில் காணப்பட்ட நூல் சார்ந்த கற்பித்தலுக்கு மேலதிகமாக வெளிவேலைகளில் அவதானம் செலுத்தப்பட்டது. இப் பாடசாலைகளில் மேல்நாட்டு சங்கீதமும், நடனமும் கற்பிக்கப்பட்டன. மாணவர்கட்கு சாஸ்திரக் கல்வியை நூல்களினூடாக கற்பிப்பதுடன் மேலதிகமாக மன எழுச்சி வளர்ச்சிக்கான ஒரு பயிற்சியினை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

ஒரு தேசத்தின் மிகப் பயனுள்ள முதலீடு இளஞ்சந்ததியினருக்கு கல்வி வழங்குவதாகும். இம் முதலீட்டில் கலாநிதி கன்னங்கராவின் சேவை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.


## 5.1 சுதந்திரம் பெற்றபின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பல் (1948 - 1970)

நாடு சுதந்திரமடைந்ததன் பின் பாடசாலை அமைப்பு முறையினை புனருத்தாரனம் செய்வதற்கு பல்வேறு சிபார்சுகள் முன் வைக்கப்பட்டன. *1950* கல்வி வெள்ளை அறிக்கை, *1951* கல்விக்கட்டளைச் சட்டம், *1962* தேசியக் கல்விக்குழு, *1964, 66* ஆண்டுகளின் கல்வி வெள்ளை அறிக்கை ஆகியவற்றினால் பல்வேறு பாடசாலை அமைப்பு முறைகள் சிபார்சு செய்யப்பட்டாலும் பாடசாலை அமைப்பு முறையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை மேற்கூறப்பட்ட வெள்ளை அறிக்கைகள் கட்டளைச் சட்டங்கள் என்பவற்றில் சிபார்சு செய்யப்பட்ட பாடசாலை அமைப்பு முறைகளின் மீது நாம் அவதானம் செலுத்துவோம்.


***1950 கல்வி வெள்ளை அறிக்கை 1951 கல்வி கட்டளைச்சட்டம் கீழ் அமைக்கப்பட இருந்த பாடசாலை முறைகள்.***



அத்துடன் கல்வித்துறையில் ஈடுபாடுகொண்டுள்ள எங்களுக்கு 1961 ஒரு மறக்க முடியாத ஆண்டாகும். இலங்கையில் சுமார் ஒன்றரை நூற்றுண்டு காலமாக அரச பாடசாலைகள், மதக்குழுக்களின் பாடசாலைகள் என இருவித பாடசாலை அமைப்புகள் நடைமுறையிலிருந்தன என்பது உங்களுக்கு தெரிந்திருக்கக்கூடும். ஆரம்பகாலத்தில் இவ்வாறுன பாடசாலை அமைப்பு முறை தவிர்க்க முடியாத ஒன்றுக இருந்தாலும் பிற்காலத்தில் இவ்வாறுன இருவித பாலனமுறை நடைமுறையிலிருத்தல் தீய விளைவுகளை ஏற்படுத்தும் என அரசும், நாட்டின் முக்கியத்துவம் பெற்ற கல்வியியலாளர்களும் உணரத் தொடங்கினர். இக்கருத்துக்கள் படிப்படியாக பரந்து அதன் விளைவாக 1966-ல் இலங்கையின் தனியார் பாடசாலைகளை அரசு கையேற்றதன் மூலம் கல்வியின் பொறுப்பும், செயற்பாடும் தொடர்பான இருவித நிர்வாக முறை முற்றுப்பெற்றதுடன் ஒரு தேசிய கல்வி முறை உருவானது. இது தொடர்பாக 1961-ம் ஆண்டு இலக்க 8 ஐக் கொண்ட உதவிபெறும் பாடசாலைகள் பயிற்சி கலாசாலைகள் சட்டத்திஞல் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகள் தவிர்ந்த சகல உதவிபெறும் பயிற்சிக்கலாசாலைகளும் சகல உதவிபெறும் பாடசாலைகளும் அரசிஞல் கையேற்கப்பட்டன. எனினும் கட்டணம் அறவிடும் உதவி பெருத 48 தனியார் பாடசாலைகள் இச்சட்டத்திலிருந்து விதிவிலக்கப் பெற்றிருந்தன.




1962 தேசிய கல்விக்குழுவிஞலும் 1964 கல்வி வெள்ளை அறிக்கையிஞலும் உருவாக்குவதற்கு எதிர்பார்த்த பாடசாலை அமைப்பு முறை.



1966 வெள்ளையறிக்கையினால் சிபார்சு செய்யப்பட்ட பாட சாலை அமைப்பு முறை

வயது 5 வருடம் – 4 வருடம்

- ஆரம்ப பாடசாலை
  - மாவட்ட பயிற்சி கல்லூரிகள் (வணிக தராதரப் பத்திரம்)
  - கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் (விவசாய, மீன்பிடித் தொழில்கள்)
  - சிரேஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் (தொழில் நுட்பவியலாளர்களினது)
  - நுண்கலை நிறுவனம் (டிப்ளோமா தராதரப் பத்திரம்)
  - சிரேஷ்ட பாடசாலை
    - ஆசிரியர் கலாசாலைகள்
    - கனிஷ்ட கல்லூரிகள் (கலை அல்லது விஞ்ஞான டிப்ளோமா தராதரப் பத்திரம்)
    - பல்கலைகழகமும், அந்நிலையிலுள்ள வேறு நிறுவனங்களும் (பட்டப்படிப்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (உ. த.)

*1947 – 1970* வரையுள்ள காலத்தில் இலங்கையின் பாடசாலை அமைப்பு முறையை மாற்றி அமைப்பதற்கு பலமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை நீங்கள் விளங்கியிருப்பீர்கள். எனினும் இச் சிபார்சுகளினால் பாடசாலை அமைப்பு முறையில் விசேடமான மாற்றங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. *1970* ஆம் ஆண்டாகும் போது இலங்கையின் பாடசாலை அமைப்பு முறை பின்வருமாறு அமைந்திருந்தது.

தரம் *1 – 8* வரை: ஆரம்பக்கல்வி
(வயது *5 - 14*)

தரம் *9 - 10* கனிஷ்ட இடைநிலைக் கல்வி
(வயது *15 - 16*)

தரம் *11 - 12* சிரேஷ்ட இடைநிலைக் கல்வி
(வயது *17 - 18*)

பாடசாலை அமைப்பு முறை மேற்குறிப்பிட்டவாறு அமைந்திருந்ததுடன் 1970 ஆம் ஆண்டின் போது இலங்கையில் இருந்த பாடசாலைகளின் எண்ணிக்கையும் மாணவர் எண்ணிக்கையும் கீழ்வரும் குறிப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

| பாடசாலை வகை | | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அரச பாடசாலைகள் | 8585 | 2,654,503 |
| 2. | தனியார் பாடசாலைகள் (கட்டணம் அறவிடும்) | 48 | 28,122 |
| | தனியார் பாடசாலைகள் (கட்டணம் அறவிடாதது) | 37 | 35,093 |
| 3. | (உதவிபெறும்) தோட்டப் பாடசாலைகள் | 824 | 84,617 |
| | (விசேட பாடசாலைகள் | | |
| | இரவுப்பாடசாலைகள் | 8 | 1,224 |
| | பிரிவெனுக்கள் | 285 | 25,000 |
| | | 9,800 | |

1970 ஆம் ஆண்டில் பாடசாலை அமைப்பின் இயல்புகள் 1972 ஆம் ஆண்டின் புனரமைப்பின்படி மாற்றப்பட்ட விதத்தினை நாம் ஆராய்வோம்.

பகுதி III


## 6.0 1972 ஆம் ஆண்டு கல்வி புனரமைப்பு ஆலோசனைகள்

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து 1970 வரை பாடசாலை அமைப்பின் பரம்பல் எவ்வாறு இருந்தது என்பது தற்போது உங்களுக்கு விளங்கியிருக்கும். இக் கால கட்டத்தில் அடிக்கடி கல்விப்புனருத்தாரண ஆலோசனைகள் வழங்கப்பட்டாலும் பாடசாலை அமைப்பு முறையில் அவ்வளவு தெளிவான மாற்றங்கள் நிகழவில்லை என நீங்கள் இதுவரை கற்றவற்றிலிருந்து விளங்கிக் கொள்வீர்கள். பொருளாதார, சமுதாய மாற்றங்கட்குப் பொருத்தமான ஒரு கல்வித்திட்டம் அவசியம் என உணரப்பட்டதால் இதுவரையிலிருந்த கல்வித்திட்டத்தை மாற்றுவதற்கு 1972 ல் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாலோசனைகட்கு

அடிப்படையாக அமைந்த நோக்கங்களைப் பற்றிய விளக்கத்தைபெற்றுக் கொள்ள கல்வியின்நோக்கமும் குறிக்கோள்களும் (120102) என்னும் மொடியூலில் 14 ல் பக்கத்தில் உங்களது அவதானத்தைச் செலுத் துங்கள்.

அவ் ஆலோசனைகளினூடாக எடுத்துக்கூறப்பட்ட கல் வித்திட்டத்தின் மீது உங்களது அவதானத்தை இப்போது செலுத்துங்கள்.

**1972 சிபார்சு செய்யப்பட்ட கல்விமுறை**




இதன்படி சாதாரண பாடசாலையினால் வழங்கக்கருதப் பட்ட புதிய கல்வியின் பிரதான மூன்று சந்தர்ப்பங் கள் பின்வருமாறு:

i. தரம் 1 தொடக்கம் 5 வரை ஆரம்பக்கல்வி (கட்டாயக்கல்விக்காலம்)

பாடவிதானம்

சமயம், கல்விமொழி இரண்டாம் மொழி கணிதம், உடல் நல, அழகியற்செயற்பாடுகள், ஆக்கத்திறன் செயற்பாடுகள், சுற்றுடல் தொடர்பான செயற் பாடுகள்.

1ம் தரம் தொடக்கம் 5ம் தரம் வரை ஒரு மாணவன் பொதுவாக வழங்கும் ஆரம்பக்கல்வியே பெறுகிறான்.

ii. 6 – 9ம் தரம் வரை கனிஷ்ட இடைநிலைக்கல்வி (கட்டாயக்கல்விக்காலம்)

பாடவிதானம்

சமயம், கல்வி, மொழி இரண்டாம் மொழி, கணிதம், விஞ்ஞானம் சமூகக்கல்வி அழகியற் கல்விப் பாடங்கள் சுகாதாரமும்-உடநலக்கல்வியும், தொழில் முன்னிலைப் பாடம் i, தொழில் முன்னிலைப்பாடம் ii கனிஷ்ட இடைநிலைக் கல்வியின் போது கற்பிக்கப்படுவது ஒரு பொதுப்பாட விதானமாகும். புத்தகங்களினால் பெறும் அறிவு நூற் கல்வியைச் சாராது ஒரு செய்முறை இயல்பிணையுடையதாக வழங்கப்படுவதே புதிய பாட விதானத்தின் முக்கிய அம்சமாகும். இதுவரை கால மும் இருந்த பாரம்பரிய பாடங்கள் பூரணமாக அகற்றப்படாவிடினும் அவைகள் புது அமைப்பில் ஒன்றிணைந்த பாடவிதானமாக வழங்கப்படுகிறது. சகல பிள்ளைகட்கும் விஞ்ஞானத்தைப்பற்றி அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொடுத்தல் புதிய பாடவிதா னத்தின் விசேட நோக்கமாகும். சமூகக்கல்வியும் ஒரு புது அமைப்பினையுடையது. இதுவரை எமது பாட சாலைகளில் கற்பிக்கப்பட்ட புவியியல் வரலாறு, குடி யியல் என்ற பாடங்கட்கு பதிலாக கற்பிக்கப்படுவதே சமூகக்கல்விப்பாடமாகும். தொழில் முன்னிலைப்பாடம் புதிய கல்வித்திட்டத்தின் மற்றொரு முக்கிய பண்பாகும். தொழில் முன்னிலைப்பாடம் என்பது எப்படியான ஒரு தொழிலாயினும் பயன்படக்கூடியதும் அன்றாட வாழ்க்கையில் பயன்படக்கூடியதுமான இயக்கத்திறன் களை ஏற்படுத்துவதாகும்.

9ம் தரத்தின் இறுதியில் ''பொதுக்கல்வி பற்றிய தேசிய தராதரப்பத்திரப் பரீட்சை'' பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும். இதுவரை 10ம் தரத்தின் இறுதியில் இருந்த க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குப் பதிலாக 9ம் தர இறுதியில் இப்பரீட்சை நடாத்தப்படும்.

iii 10 தொடக்கம் 11ம் தரம் வரை சிரேஷ்ட இடைநிலைக்கல்வி.

10 தரத்தில் மாணவர்களை பாடத்துறைகட்கு ஏற்ப முதலில் வகைப்படுத்திக் கொள்ளவேண்டும். பௌதிக இயல், உயிரியல், சமூகக்கல்வி, வணிகக்கல்வி ஆகிய பல்வேறு பாடங்களினூடாக உயர்கல்வி பற்றிய தேசிய கல்வித்தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மாணவர்கட்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். 11ம் தர இறுதியில் இப்பரீட்சை நடைபெறும்.

சிரேஷ்ட இடைநிலைக்கல்வி பெறுவதற்கு தகைமை பெறாத மாணவர்கள் கனிஸ்ட தரத்திலுள்ள தொழில் நுட்ப, வணிக நுண்கலை கல்லூரிகளிலோ அல்லது தேசிய சேவையிலோ சேர்ந்து கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

11ம் தர இறுதியில் தேசிய உயர் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சைக்கும் தோற்றும் மாணவர்கட்கு உயர் கல்வியும் மேலதிக கல்வியும் பெறுவதற்காக வழங்கப்பட்டுள்ள பல்வேறு சந்தர்ப்பங்கள் பற்றிய விளக்கத்தை மேற்குறிப்பிடப்பட்ட கல்வி முறையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இப்புதிய கல்வித் திட்டத்தின் ஒரு விசேட பண்பாக இருப்பது பாடசாலைக்கு அனுமதி வழங்கும் வயது ஆறாக உயர்த்தப்பட்டிருப்பதாகும். அத்துடன் அவ்வயதெல்லை அடையும் வரை வளர்ச்சியடையும் குழந்தை மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அங்கவீனக் குறைபாடுள்ள பிள்ளைகட்காக வழங்கப்பட்டுள்ள கல்விச் சந்தர்ப்பங்கள் மற்றொரு பண்பாகும்.

இக்கல்வி முறையில் சிபார்சு செய்யப்பட 1ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரை வரையுள்ள பொதுப் பாடசாலை அமைப்பு முறை 1978 வரை செயற்பட்டது. 1978ல் ஏற்பட்ட மாற்றங்களை இதைத் தொடர்ந்து நீங்கள் கற்பீர்கள்.

## 7.0 1978 ஆம் ஆண்டு கல்வி புனரமைப்பு ஆலோசனையின் பின் பாடசாலைகளின் அமைப்பு முறை

1972ல் ஏற்படுத்தப்பட்ட கல்விப்புனரமைப்பு நாட்டின் அன்றைய பொருளாதார நிலைக்குப் பொருத்தமான ஒரு கல்வி முறையை உருவாக்குவதற்கு மேற்

கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாகும். இதுதொடர்பாக 6ம் தரம் தொடக்கம் 9ம் தரம் வரையுள்ள கனிஷ்ட இடைநிலைப் பாட விதானத்தில் கணிதம், விஞ்ஞானம், தொழில்முன்னிலைப்பாடம் ஆகிய பாடங்கள் இடம் பெற்றிருத்தலை விசேடமாகக் குறிப்பிடலாம்.

இச் சிபார்சுகளை செயற்படுத்தும் போது ஏற்பட்ட கஷ்டங்கள், வளங்கள் குறைபாடு காரணமாக 1978 ம் ஆண்டாகும் போது கூட அந்நோக்கங்கள் நிறைவேறியதாகத் தெரியவில்லை. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்களை கற்பிப்பதற்கு சிறப்பாற்றல் பெற்ற ஆசிரியர்கள் பற்றாக் குறையை விசேடமாகக் குறிப்பிடலாம். இதன் காரணமாக மாணவர்களின் முன்னேற்றம் தடைப்படுவதால் பெற்றோர்களும் ஆசிரியர்களும், கல்வியியலாளர்களும் பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர். இந்நிலையிலிருந்து கல்வியை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்ல அரசு 1978 ல் மற்றொரு படியில் காலடி வைத்தது.

1978ன் சிபார்சுகள் செயற்படுத்தப்பட்ட முறையை நாம் ஆராய்வோம். அச்சிபார்சுகள் சில முக்கிய பண்புகளைக் கொண்டிருந்தன.


- i பாடசாலையின் அனுமதி வயது 5 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.
- ii கனிஷ்ட இடைநிலைக்கல்விக் காலம் ஒரு வருடத்தினால் அதிகரிக்கப்பட்டது.
- iii கல்வி என்னும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறை மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டது.
- iv க. பொ. த. (சா. த.) க. பொ. த. (உ. த.) பரீட்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.
- v பாடசாலையிலிருந்து இடையில் நீங்குவோருக்கு ஒரு பயிற்சியை வழங்குதல்.
- vi உயர் கல்விக்கு மேலும் சந்தர்ப்பங்கள் அதிகமாக வழங்குதல்.

பாடசாலையிலிருந்து இடையில் நீங்குவோருக்கு மேலாக பயிற்சி வழங்குதல் நுண்கலைக்கல்வியை விரிவுபடுத்தல், உயர் கல்விக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்தல் ஆகியன இப்புனரமைப்பின் விசேட பண்புகளாகும். இதுகாலவரை நடைமுறையிலிருந்த பல்கலைக்கழக வெளிநிலைச் சேவை நிலையமும் இலங்கைத் தொலைக் கல்வி நிலையமும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு திறந்த பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டதால் உயர் கல்விக்கு அதிக வாய்ப்புகள் ஏற்பட்டன.

பாடவிதானத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பண்டைய இலக்கிய நூல்களின் சில பகுதிகள் பாடப்புத்தகங்களில் காணப்படுதல் ஒரு விசேட பண்பாகும். 1972ல் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் முன்னிலைப் பாடத்திற்குப் பதிலாக புதிய தொழில் நுட்பப்பாடம் இடம் பெறுதல் மற்றொரு பண்பாகும்.

சமூகக் கல்விப் பாடத்தில் காணப்பட்ட அபிப்பிராய பேதத்திற்குரிய பாடப் பகுதிகள் 1978 ல் அகற்றப் பட்டன.

இச் சிபார்சுகட்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலை அமைப்பு முறை பின்வருமாறு அமைந் துள்ளது. இவ்வமைப்பு முறை இன்று வரை அமுலி லுள்ளது.




கீழ்வரும் புள்ளி விபர அட்டவணையிலிருந்து 1977 – 82 வரை பாடசாலைகளின் எண்ணிக்கை வளர்ச்சியடைந்துள்ள விதத்தினையும் அவைகளில் கற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் கற்பித்த ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் கற்றுக் கொள்ளுங்கள்.

| | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|---|
| 1. பாடசாலைகளின் முழு எண்ணிக்கை | 9701 | 9726 | 9626 | 9794 | 9901 |
| 2. மாணவர்களின் முழு எண்ணிக்கை | 2566381 | 3083725 | 3208191 | 3358240 | 3484661 |
| 3. ஆசிரியர்களின் முழு எண்ணிக்கை | 113379 | 125466 | 138488 | 136818 | 133802 |

இப்பாடசாலைகள் முழு இலங்கையிலும் எவ்வாறு பரந்துள்ளன என்பதை கீழ்வரும் படத்திலிருந்து விளங்கிக் கொள்ளுங்கள். இலங்கையில் பல நூற்றாண்டுகளாக இருந்த பாடசாலை அமைப்புமுறை பற்றியும் தற்கால நிலையை அடைந்த விதம் பற்றியும் தற்போது நீங்கள் விளங்கியிருப்பீர்கள். கல்வியின் முன்னேற்றம் இத்தோடு நின்று விடுவதில்லை. எமது சமுதாயத்தின் முன்னேற்றத்துடன் கல்வியும் முன்னேற்றம் அடையும். இம்முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்ள தொடர்ந்து வரும் பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.

## கல்வி மாவட்டம் / பிரதேசங்கட்கு ஏற்ப பாடசாலைகளின் எண்ணிக்கை - 1982




| | | |
|---|---|---|
| 1. | கொழும்பு | 283 |
| 2. | ஹோமாகம | 208 |
| 3. | கம்பஹா | 370 |
| 4. | மினுவாங்கொடை | 260 |
| 5. | களுத்துறை | 489 |
| 6. | கண்டி | 794 |
| 7. | மாத்தளை | 309 |
| 8. | நுவரெலியா | 373 |
| 9. | காலி | 540 |
| 10. | மாத்தறை | 449 |
| 11. | தங்கல்லை | 292 |
| 12. | யாழ்ப்பாணம் | 564 |
| 13. | மன்னார் | 100 |
| 14. | முல்லைத்திவு | 85 |
| 15. | வவுனியா | 128 |
| 16. | மட்டக்களப்பு | 253 |
| 17. | அம்பாறை | 108 |
| 18. | கல்முனை | 170 |
| 19. | திருகோணமலை | 210 |
| 20. | குருணாகல் | 407 |
| 21. | குளியாப்பிட்டி | 297 |
| 22. | நிக்கவரட்டிய | 259 |
| 23. | சிலாபம் | 174 |
| 24. | புத்தளம் | 155 |
| 25. | அனுராதபுரம் | 521 |
| 26. | பொலன்னறுவை | 156 |
| 27. | பண்டாரவளை | 535 |
| 28. | மொனராகலை | 188 |
| 29. | இரத்தினபுரி | 599 |
| 30. | கேகாலை | 625 |

இலங்கைப் பாடசாலைகளின் அமைப்புமுறையில் தற்காலத்தில் நிகழும் பெரும் மாற்றங்களை அறிந்து கொள்ள பகுதி iv ஐப் படியுங்கள்.

பகுதி IV

## 8.0 1981 ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை


1943 கன்னங்கர அறிக்கையின் சிபார்சுகளின்படி ஆரம்பிக்கப்பட்ட கல்விப் புனரமைப்புக்களால் எமது கல்வி வசதிகள் கடந்த 40 ஆண்டுகளாக நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் மிக விரைவாகப் பரந்து வளர்ச்சியடைந்துள்ளது என்பதை நீங்கள் விளங்கியிருப்பீர்கள்.

இதற்காக இலவசக்கல்வி, கிராமப்புறங்களில் மத்திய மகாவித்தியாலயங்களை நிறுவியமை, சுயபாஷைக் கல்வி இலவசப் பாடநூல்கள், புலமைப்பரிசில் முறைகள், பல்கலைக்கழக மாணவர்கட்கான வங்கிக் கடன்கள், விஞ்ஞானக் கல்வியை நாடு முழுவதும் பரவலாக்கியமை போன்ற பல்வேறு முறைகள் கையாளப்பட்டன. இவ்வாறு விரைவாகப் பரந்துவளர்ந்த கல்வி முறையின் விளைவாக உயர்கல்வியும் உயர்தொழிற் தகைமைகளும் பெற்ற ஒரு சிறு குழுவினர் உருவாகினர். எனினும் பொதுமக்கள் நூற் கல்வி மூலம் உருவாகும் மனப்பாங்கு எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைப் பெற்றூர்களேயன்றி மனப்பாங்குகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களையும் திறன்களையும் பெற்றுக்கொள்ள வில்லை. இவ்வாறான குறைகளைத் தவிர்த்து நாட்டின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு கல்வியை உருவாக்கிக் கொள்வதற்கான புதிய ஆலோசனைகள் 1981 வெள்ளை அறிக்கை மூலம் முன்வைக்கப்பட்டன. இவ்வெள்ளை அறிக்கை பொதுக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, பாடநெறி பயிற்சி ஆகியன பற்றி ஆராய்ந்த மூன்று குழுக்களின் சிபார்சுகளை கவனத்தில் கொண்டே தயாரிக்கப்பட்டது. அக்குழுக்கள் பின்வருமாறு:

1. போகொட பிரேமரத்தின குழு,
2. எஸ். ஞானலிங்கம் குழு,
3. எச். டி. சுகதபால குழு.

1981 வெள்ளை அறிக்கை சிபார்சுகட்கு அடிப்படையான நோக்கங்களை விளங்கிக்கொள்வதற்கு கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் (120102) என்னும் மொடியூலின் பக்கம் 15ல் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். நோக்கங்களை விளங்கிக்கொள்வதுடன் கீழ்வரும் குறிப்பில் அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் கூறப்பட்டுள்ள கல்விமுறையைப் பற்றியும் விளங்கிக்கொள்ளுங்கள்.

## 1981 சிபார்சு செய்யப்பட்டுள்ள கல்விமுறை




| முன்செயற்படுத்தப் பட்ட முறை | 1981 சிபார்சு செய்யப் பட்டுள்ள முறை |
|---|---|
| 1. பாடசாலை வயது 5 வருடத்தில் ஆரம்பமாதல் | சமமானது |
| 2. 12 வருடங்களுக்கு பொதுக்கல்வி | 11 வருடங்களுக்கு பொதுக்கல்வி |
| 3. பல்கலைக்கழகங்கட்கும் ஏனைய தொழிற்கல்வி நிறுவனங்கட்கும் அனுமதி பெறுவதற்கு வழி வகுக்கும் 11ம், 12ம் தரங்கள் பொது முறையின் ஒரு பகுதி | பல்கலைக்கழகங்கட்கும் ஏனைய தொழிற் கல்வி நிறுவனங்கட்கும் அனுமதி பெற வழிவகுக்கும் 11ம், 12ம் தரங்கள் கல்லூரிக்காலத்தில் கல்லூரியிலேயே நடாத்தப்படும். |

| | | |
|---|---|---|
| 4 | பல்கலைக்கழகத்துக்கும், ஏனைய உயர்கல்வி நிறுவனங்கட்கும் அனுமதிப்பதற்காக 12ம் தர இறுதியில் க. பொ. த. (உ. த.) பரீட்சை நடாத்தப் பட்டது. | 13ம் தர இறுதியில் பல்கலைகழக அனுமதிப்பரீட்சை ஏனைய உயர் கல்வி நிறுவனங்களும் இவ்வாறான முறையினை பின்பற்றுவார்கள். |
| 5 | பாடசாலை செல்லாதவர்கட்கும் பல்கலைக் கழக அனுமதி பெற வாய்ப்புக்கள். | தொழில் தகைமை உள்ள சிறு தொகையினரைத் தவிர பாடசாலைகள் மூலம் செல்லும் மாணவர்கட்கு மட்டும் பல்கலைக்கழக அனுமதி பெறலாம். |
| 6 | தொழிற்கல்வி கல்வி அமைச்சின் கீழ் வழங்கப்பட்டது. | தொழிற்கல்வி தொழிற் கல்வி அதிகாரியின் கீழ் வழங்கப்படும். |
| 7 | தொழிற்கல்வி நிலையங்கட்குச் செல்வதற்கான குறைந்த வயது – 13. | திறந்த பாடசாலைகட்குச் செல்வதற்கான குறைந்த வயது – 10. |

சிபார்சு செய்யப்பட்டுள்ள முறை தற்போது நடைமுறையிலுள்ள முறையிலும் மாறுபடும் விதத்தினை விளங்கிக்கொண்ட நீங்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ள முறையின் விசேட இலட்சனங்கள் மீது மனதைச் செலுத்துங்கள்.

அம்முறையின் விசேட பண்புகள் பின்வருமாறு:

### நூற்கல்வி

1ம் தரம் தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை கல்விச் சந்தர்ப்பங்கள் நான்கு ஆகும்.

வருடம் 5

| | | |
|---|---|---|
| i | ஆரம்பக்கல்வி | -வருடம் 5 |
| ii | இடைநிலை கல்வி | -வருடம் 6 |
| iii | கல்லூரிநிலை கல்வி | -வருடம் 2 |
| iv | பல்கலைக்கழகக்கல்வி | -வருடம் 4 |

வருடம் 22

### 3ம் நிலைக்கல்வி

ஆரம்பக்கல்வி காலத்திலும் கனிஷ்ட இடைநிலைக் கல்வி காலத்திலும் சிரேஷ்ட இடைநிலைக்கல்விக்காலத்திலும் கல்வியைக் கைவிடுபவர்கள் தொழில் நுட்ப தொழில்

நிறுவனங்கள் விசேட விவசாய நிறுவனங்களில் கல்வியைப்பெற முடியும். அதில் சிறந்த முறையில் கற்பவர்களுக்கு நூற் கல்வி பெறுவதற்கான வாய்ப்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

## ஆரம்பப் பாடசாலையின் பாடவிதானம்

தற்போது நடைமுறையிலுள்ளது போன்றே ஆரம்ப வகுப்புகளில் ஒன்றிணைந்த பாடவிதானம் செயற்படுத் தப்படும் வாசிப்பு, எழுத்து. கணிதம் எனும் பாடங் களின் அடிப்படைத்திறமைகள் மீது கூடிய அவதானம் செலுத்தப்படும் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் மூன்றும் தரத்திலிருந்து (ஆண்டு 4) முன்போலவே கற்பிக்கப்படும்.

## இடைநிலைப் பாடசாலையின் பாடவிதானம்

| கனிஷ்டஇடைநிலை | சிரேஷ்ட இடைநிலை (9 – 11 தரம்) |
|---|---|
| முதன்மொழி | முதன்மொழி |
| கணிதம் | கணிதம் |
| சமயம் | சமயம் |
| ஆங்கிலம் | ஆங்கிலம் |
| விஞ்ஞானம் | விஞ்ஞானம் |
| சமூகக்கல்வி | சமூகக்கல்வி |
| பயிற்சித்திறன்கள் | அழகியற்கல்வி |
| சுகவியலும் உடனலக் கல்வியும் | தொழில் நுட்பப் பாடம் |
| (பயிற்சித்திறன்கள் என்னும் பாடம் தற்போது கற்பிக்கப் படும் தொழில்நுட்பப் பாடத்திற்குப் பதிலாகக் கற்பிக்கப்படும்) | சுகவியலும் உடனலக்கல் வியும் தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் க. பொ. த. பரீட்சையில் தோற்று வதற்குச் சமர்பிக்கப்படு வது 5 பாடங்களேயாகும். 1. முதன்மொழி 2. கணிதம் 3. ஆங்கிலம் 4. விஞ்ஞானம் 5. சமூகக்கல்வி |

கல்லூரி மட்டமும் (12ம் 13ம் தரங்கள்) பல்கலைக் கழக பிரவேசப் பரீட்சையும் பாடசாலை அமைப்பின் இறுதித்தரங்களான 12ம், 13ம் தரங்களில் கல்வி முன் பல்கலைக்கழக் கல்வியின் இயல்பினைக் கொண்ட தாக இருப்பதோடு அப்பாடவிதானமும் நூற்கல்வி யைச் சார்ந்ததாக இருக்கும். 13ம் தர இறுதியில் பல் கலைக்கழகப் பிரவேசப்பரீட்சை நடைபெறும். இது பாட சாலை மாணவர்கட்கு மட்டுமே நடாத்தப்படும்.

கல்லூரி மட்டத்தின் பாடவிதானம்

1. கலை

2. விஞ்ஞானம்

பாட விதானம் இருபகுதிகளைக் கொண்டதாக இருக்கும்

i பகுதி (கட்டாயமானது)

ii பகுதி (விருப்பிற்குரியது)

பொதுப்பாடங்கள் – தெரிவு செய்த மூன்று பாடங்கள்.

- இலங்கையின் கலாச்சாரமும் சமுதாய பொருளாதாரமும்
- முதன்மொழி
- ஆங்கிலம்
- மக்களுடன் தொடர்பான செயற்திட்டங்கள் மூலம் வேலை அனுபவம்.

1. கலைப்பாடங்கள்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம், பாளி, சமஸ்கிருதம், கிரேக்க, இலத்தீன், புது மொழி, அரபு, இந்து சமயம், கிறிஸ்து சமயம், இஸ்லாம், பொருளியல் புவியியல், வரலாறு, அரசியல், கணிதம், வணிகவியல்

2. விஞ்ஞானப்பாடங்கள்.

கணிதம், பௌதிகவியல் இரசாயனவியல் உயிரியல் விவசாய விஞ்ஞானம்

## கொத்தணிப் பாடசாலைகளும், தனித்துவப் பாடசாலைகளும்

தற்போதுள்ள 9500க்கு மேற்பட்ட பாடசாலைகளை 1000 கொத்தணிகளாக இணைக்கப்படும். ஒரு கொத்தணி சுமார் 10 பாடசாலைகளைக் கொண்டதாகவும் பாடசாலைக் கொத்தணி சுமார் 3000 மாணவர்களையுடையதாகவும் இருக்கும். இதற்கேற்ப பூகோள அமைப்பின்படி அண்மையிலுள்ள பெரிய, சிறிய பாடசாலைகளின் கொத்தணி ஒரு பிரதான அதிபரின் கீழ் கொண்டு வரப்படும். முழுப் பாடசாலை கொத்தணிக்கும் உரித்தான சகல வளங்களும் வசதிகளும் அக் கொத்தணியிலுள்ள சகல பாடசாலை மாணவர்கட்கும் பொதுவானதாகும். கொத்தணியில் ஒரு இடத்தில் காணப்படும் குறைபாட்டினை மற்றோரிடத்தில் உள்ள நிறைபாட்டினால் நிரப்பிக்கொள்ள முடியும்.

பாடசாலைகளின் கொத்தணியில் உட்படுத்திக்கொள்ள முடியாத 3000 மாணவர்கட்கு மேற்பட்ட எண்ணிக்கையையுடைய பெரிய பாடசாலைகள் தனித்துவம் பாடசாலைகளாக நடாத்திச் செல்லப்படும் (மேலதிக விளக்கங்கட்கு கல்விப்புனரமைப்பு ஆலோசனைகள் பக்கம் 1 VI ல் உள்ள சிபார்சுகளை வாசியுங்கள்).

அண்மிய எதிர்காலத்தில் இவ் ஆலோசனைகள் செயற்படுத்தப்படும் விதத்தை நீங்கள் காணலாம். கல்வி முன்னேற்றத்துடன் நீங்களும் முன்னேறிச் செல்லுங்கள். இப்பகுதியில் நீங்கள் கற்ற பகுதிகளை ஞாபகத்தில் கொண்டு கீழ்வரும் வினாக்கட்கு விடை தருக.

**செவ்வைபார்த்தல் 3**

மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. 1981 ஆலோசனைகட்கு ஏற்ப பாடசாலை செல்ல ஆரம்பிக்கவேண்டியது.

   அ. 6 வருடத்திலாகும்

   ஆ. 6+ வருடத்திலாகும்

   இ. 5 வருடத்திலாகும்

   ஈ. 5+ வருடத்திலாகும்

2. 1981 வெள்ளையறிக்கை ஆலோசனைகட்கு ஏற்ப பல்கலைக்கழக இறுதிவரைக் கல்வியின் பிரதான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை

   அ. மூன்றாகும்

   ஆ. நான்காகும்

   இ. ஆறாகும்

   ஈ. இரண்டாகும்

3. இடைநிலைக்கல்வி மட்டத்தில் மாணவர் கற்க வேண்டியிருப்பது

   அ. பல்வகைப் பாடவிதானமாகும்

   ஆ. ஒரே பாடவிதானமாகும்

   இ. கலைகள் சார் பாடவிதானமாகும்

   ஈ. தொழில் சார் பாடவிதானமாகும்

4. பல்கலைக்கழகத்துக்கு ஏனைய உயர் கல்வி நிறுவனங்கட்கும் பிரவேசப் பரீட்சை நடைபெறுவது.

   அ. 11ம் தர இறுதியிலாகும்

   ஆ. 12ம் தர இறுதியிலாகும்

   இ. 13ம் தர இறுதியிலாகும்.

   ஈ. 10ம் தர இறுதியிலாகும்.

5. ஒரு பாடசாலைக் கொத்தணியில் உள்ளடக்கவேண்டிய மாணவர்களின் உயர்ந்த எண்ணிக்கை.

அ. 1000 ஆகும்

ஆ. 2000 ஆகும்

இ. 3000 ஆகும்

ஈ. 4000 ஆகும்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## 9.0 பொழிப்பு

இம் மொடியூலைக் கற்றதன் பின் நமது இலங்கைத் தீவின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பலை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். பண்டைய இலங்கையில் கல்வியின் கேந்திர ஸ்தானமாக குருவீடு, பன்சலை (கோவில்) பிரிவெனு, ஆகியனவே அமைந்திருந்தன. இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பின் சமயப்பிரசாரத்திற்கு அடிப்படையான ஒரு பாடசாலை அமைப்புமுறை உருவானது. அதன்பின் முழு இலங்கையும் பிரித்தானியர் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பின் இலங்கையில் பரிஷ் பாடசாலைகள், கல்லூரிகள் என இருவகை பாடசாலைகள் தோன்றின. இக்காலத்தில் காணக்கூடியதாக இருந்த விசேட பண்பு அரச, தனியார் என இருவித பாடசாலை அமைப்பு முறை வளர்ச்சியடையத் தொடங்கியதேயாகும். அரச தனியார் பாடசாலைகளில் 1943 கன்னங்கர குழு ஆலோசனைகளுடன் கட்டாய இலவசக் கல்வி ஆரம்பமானது. அன்று தொடக்கம் காலத்துக்குக் காலம் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் (சிபார்சுகள்) காரணமாக பாடசாலை அமைப்பு முறை விரிவடைந்தது. 1972 ல் 1ம் தரம் தொடக்கம் 5ம் தரம் வரையிலான ஆரம்பக்கல்வி 6 – 9 ம் தரம் வரை கனிஷ்ட இடைநிலைக் கல்வி 10 – 11ம் தரம் வரை சிரேஷ்ட இடைநிலைக் கல்வி என மூன்று கட்டங்களை கொண்ட கல்வியமைப்பு உருவானது. அத்துடன் பாடசாலை செல்லத் தொடங்கும் வயது 6 வருடம் வரை உயர்த்தப்பட்டது. பாடவிதானத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1978 ல் மேலதிக கல்வி என்னும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு முழுக் கல்விமுறையும் மீண்டும் உருவாக்கப்பட்டது. பாடசாலை அனுமதி பெறும் வயது 5 ஆக குறைக்கப்பட்டது. கனிஷ்ட இடைநிலைக்கல்விக் காலம் ஒரு ஆண்டினல் அதிகரிக்கப்பட்டுள்ளது. உயர்கல்விக்கு மேலதிக சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருப்பதோடு பாட விதானத்திலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 1981 வெள்ளை அறிக்கை ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி நூற் கல்வி, என்ற மூன்று துறைகளின் அந்நியோன்னிய தொடர்புகளினூடாக நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய ஒரு கல்வி அமைப்பினை உருவாக்க முயன்றுள்ளது.

இம் மொடியூலில் நீங்கள் கற்ற விடயங்களை எவ்வளவு தூரம் விளங்கிக்கொண்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் பரீட்சித்துப் பாருங்கள். அதற்காக கீழ்வரும் பிற் சோதனைக்கு விடையளியுங்கள்.

## 10.0 பிற்சோதனை

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. பண்டைய சிங்கள மன்னர்காலத்தில் ஆரம்பக்கல்வி
   - அ. குடும்பத்தில்
   - ஆ. பன்சலையில் (கோவிலில்)
   - இ. குரு வீட்டில்
   - ஈ. சமுதாயத்தில் வழங்கப்பட்டது.
2. பிரிவெனாக்களில் கல்வி பெற்றுக்கொள்ள
   - அ. பிக்குகளுக்கு
   - ஆ. பொதுமக்களுக்கு
   - இ. பிக்குகளுக்கும் பொதுமக்களுக்கும்
   - ஈ. ஆண், பெண் இருபாலாருக்கும் முடியுமாக இருந்தது.
3. ஒல்லாந்தர் காலத்திலிருந்து பாடசாலைகள் போர்த்துக்கீசர் காலப்பாடசாலைகளிலும் வேறுபடுவது
   - அ. நோக்கங்களில்
   - ஆ. ஒழுங்கமைப்பில்
   - இ. பாடங்களில்
   - ஈ. நிர்வாகத்தில்
4. 1930 ம் ஆண்டாகும் போது இலங்கையில் அதிகமாக நிறுவப்பட்டிருந்தது.
   - அ. மிஷனரி பாடசாலைகளாகும்
   - ஆ. அரச பாடசாலைகளாகும்
   - இ. பௌத்த பாடசாலைகளாகும்
   - ஈ. தனியார் பாடசாலைகளாகும்.
5. இலவசக் கல்விமுறை இந்நாட்டில் அரசின் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது
   - அ. சுதந்திரம் கிடைத்ததனாலாகும்
   - ஆ. கன்னங்கர குழுவின் சிபார்சுகளினாலாகும்
   - இ. இரு வித நிர்வாகம் ஏற்பட்டதனாலாகும்
   - ஈ. பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதனாலாகும்

6. 1970 ம் ஆண்டளவில் பாடசாலை அமைப்பு முறை

அ. தரம் 1 – 8, 9 – 10, 11 – 12 என

ஆ. தரம் 1 – 5, 6 – 10, 11 – 12 என

இ. தரம் 1 – 6, 7 – 10, 11 – 12 என

ஈ. தரம் 1 – 6, 6 – 9, 10 – 11 என

அமைந்திருந்தது.

7. 1972 ல் ஆலோசனைக்கு ஏற்ப பொதுவான பாடசாலைக் கல்வியின் பிரதான கட்டங்கள்

அ. இரண்டாகும்

ஆ. மூன்றாகும்

இ. நான்காகும்

ஈ. ஐந்தாகும்.

8. 1978 ன் கல்விப் புனரமைப்பு ஆலோசனைகட்கு ஏற்ப கனிஷ்ட இடைநிலைக் கல்வியின் காலம்

அ. 4 வருடங்களாகும்

ஆ. 3 வருடங்களாகும்

இ. 5 வருடங்களாகும்

ஈ. 2 வருடங்களாகும்.

9. 1981 (ஆலோசிக்கப்பட்டுள்ள) சிபார்சு செய்யப்பட்டுள்ள கல்வி முறைக்கு ஏற்ப பொதுக்கல்விக்கான காலம்.

அ. 12 வருடங்களாகும்

ஆ. 11 வருடங்களாகும்

இ. 10 வருடங்களாகும்

ஈ. 9 வருடங்களாகும்.

10. 1982 இலங்கை முழுவதும் காணப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை

அ. 7420

ஆ. 8203

இ. 9901

ஈ. 10907 ஆகும்.

11. பாடவிதானத்தில் சேர்த்துக்கொள்வதற்கான 1981 வெள்ளை அறிக்கையினுல் ஆலோசிக்கப்பட்டுள்ள புதிய பாடம்

அ. பாலியற் கல்வியாகும்

ஆ. வாழ்க்கைத்திறன் கல்வியாகும்

இ. குடிசனக் கல்வியாகும்

ஈ. உள்ளார்ந்த திறன்களாகும்.

12. சிபார்சு செய்யப்பட்டுள்ள வெள்ளை அறிக்கைக்கு ஏற்ப தேசிய மட்டத்தில் பரீட்சை நடாத்தப் படுவது

அ. 8ம் 11ம் தரங்களின் இறுதியாகும்
ஆ. 8ம் 11ம் 12ம் தரங்களின் இறுதியிலாகும்
இ. 11ம் 12ம் தரங்களின் இறுதியிலாகும்
ஈ 5ம் 11ம் 12ம் தரங்களின் இறுதியிலாகும்

13. 1981 புதிய சிபார்சு முறைகட்கு ஏற்ப முற் பாடசாலைக் கல்வி

அ. அரசினால் ஒழுங்கமைக்கப்படும்
ஆ. முற்றாகவே நீக்கப்படும்
இ. உள்ளூராட்சி மன்றங்கட்கு கையளிக்கப்படும்
ஈ. தனியார் நிறுவனங்களிடம் ஒப்புவிக்கப்படும்

14. 1981 வெள்ளை அறிக்கையில் தனித்துவப்பாடசாலை யாக நடாத்துவதற்கு இடமளிக்கப்படவேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அ. மிகச் சிறிய பாடசாலைகட்காகும்
ஆ. மத்திய மகா வித்தியாலயங்களுக்காகும்
இ. மிகப் பெரிய பாடசாலைகட்காகும்
ஈ. மகா வித்தியாலயங்களுக்காகும்.

15. 1981 கல்வி வெள்ளை அறிக்கையைத் தயாரிப்ப தற்கு முக்கிய காரணம்

அ. அதிகரிக்கும் கல்வி விரயத்தைத் தடைசெய் வதற்காகும்.
ஆ. கல்விக்கு ஏற்படும் செலவைக் கட்டுப்படுத்த லாகும்.
இ. காலத்தினதும், நாட்டினதும் தேவையை கவனத்திற் கொண்டமையினாலாகும்.
ஈ. தொழிற்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகும்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

**இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றி கரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.**

## 11.0 ஒப்படை

காலத்துக்கு காலம் இலங்கையின் பாடசாலை அமைப்பு முறை யில் மாற்றமுற்று வந்துள்ளது. இதற்கான காரணத்தைப் பின்வரும் தலையங்கங்களின் கீழ் விளக்குக.

1. மாற்றத்துக்கான காரணங்கள் (சமூக, கலாச்சார, சமய, அரசியல்)

11. கல்விக் கொள்கைகள்.

111. புதிய கல்விப் போக்குகள்.

## 12.0 விடைகள்

முற்சோதனை
1 — அ
2 — ஆ
3 — இ
4 — ஆ
5 — ஆ

செவ்வைபார்த்தல் 1
1 — இ
2 — ஆ
3 — இ
4 — அ
5 — இ

செவ்வைபார்த்தல் 2
1 — ஆ
2 — ஈ
3 — ஆ
4 — ஈ
5 — அ

செவ்வைபார்த்தல் 3
1 - ஈ
2 - ஆ
3 - ஆ
4 - இ
5 - இ

பிற்சோதனை
1 - இ
2 - இ
3 - ஆ
4 - ஈ
5 - ஆ
6 - அ
7 - ஆ
8 - இ
9 - ஆ
10 - இ
11 - ஆ
12 - இ
13 - அ
14 - இ
15 - இ

## 13.0 உசாத்துணை நூல்கள்

1 இலங்கையின் கல்வி – நூற்றுண்டு வெளியீடு

2 கல்விப்புனரமைப்பு ஆலோசனைகள் (1981 கல்வி வெள்ளை அறிக்கை)

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.